முச்சந்தி முரளி



"அப்ப கடல் பிரச்சினையால கொஞ்ச நாளைக்கு கடும் அலைடிக்கப்போகுது எண்டு சொல்லுங்கோ"

Registered as a Newspaper | பக்கங்கள் 16+8 | விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39 | கதிர் : 91

ஞாயிற்றுக்கிழமை 25 பெப்ரவரி 2024

மாசி 13 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2055

# இந்திய மீனவர்களை விடுவிக்க கடும் இராஜதந்திர அழுத்தம்



## விடுவிக்கக் கோருவது நியாயமல்ல கடற்படைத்தளபதி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 25**

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்குமாறு இந்திய அரசாங்கத்தால் கடுமையான இராஜதந்திர அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. இந்திய மீனவர்கள் கச்சதீவுத் திருவிழாவைப் புறக்கணித்துள்ள நிலையில், இராஜதந்திர அழுத்தங்கள் பல்வேறு மட்டங்களிலும் பிரயோகிக்கப்படுகின்றன என நம்பகரமாகத் தெரியவருகின்றது.**

15

# எமக்கான இழப்பீடு கிடைக்கும் வரை இந்திய மீனவர் விடுவிப்புக்கு எதிர்ப்பு

## நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் முன்னிலையாவர் வடமராட்சி மீனவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 25

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகளால் எங்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகளை பெறும் வரையில், படகுகளுடன் கைதாகும் இந்திய மீனவர்களை விடுவிக்க எமது தரப்பு சட்டத்தரணி மூலம் எதிர்ப்பை பதிவு செய்ய இருக்கின்றோம். இருநாட்டு மீனவர் பிரச்சனைக்கு இந்திய - இலங்கை அரசாங்கங்கள் சரியான முடிவு

15

# அத்துமீறிய மீன்பிடியை எதிர்த்துப் போராட்டம்!

## நடுக்கடலில் முன்னெடுக்க யாழ். மீனவர்கள் முடிவு

யாழ்ப்பாணம், பெப். 25

இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக, இந்திய - இலங்கை கடல் எல்லையில் போராட்டத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கிராமியக் கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில்

15



# திருப்பலி ஒப்புக்கொடுப்புடன் கச்சதீவு திருவிழா நிறைவு

யாழ்ப்பாணம், பெப். 25

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு நேற்றுக்காலை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

15

# இரண்டு தமிழர்களை நாடு கடத்தியது சீனா!

கொழும்பு, பெப். 25

கொள்கலனொன்றில் மறைந்திருந்து மலேசியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றபோது சீனாவில் கைது செய்யப்பட்ட இரு தமிழர்களும் ஒரு வருடத்தின் பின்னர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

ராஜேந்திரன் (வயது - 26) மற்றும் ஜெயக்குமார் தருமராசா

15

# சென்னை சுப்பர் கிங்ஸில் யாழ்ப்பாணத்து வீரர்?

கொழும்பு, பெப். 25

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் வலைப்பந்துவீச்சாளராக ஒப்பந்தம் செய்யப்படவுள்ளார்.

இலங்கையின் தேசிய கிரிக்கெட் வீரர்களின் முகவராகச் செயற்படும் அமில கலுகலகே தனது சமூக ஊடகப் பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

15

# மத்திய வங்கி ஆளுநர் வடக்குக்கு நேற்று வருகை

கிளிநொச்சி, பெப். 25

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க கிளிநொச்சி, அறிவியல்நகரில் அமைந்துள்ள மத்திய வங்கியின் வடபிராந்திய அலுவலகத்துக்கு நேற்று வருகை தந்தார்.

15

## புதிதாக இணைந்த

# 11 வயது மாணவன் மீது 15 மாணவர்கள் தாக்குதல்

## வடமராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 25

தரம் - 6க்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவன் மீது தரம் - 10 இல் கல்வி கற்கும் சில மாணவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். காது வழியாக குருதி வந்த நிலையில் மாணவன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச்

15

## கசிப்பு விற்பனை:



# தட்டிக்கேட்ட இளைஞன் கத்தியால் குத்திக்கொலை

முல்லைத்தீவு, பெப். 25

மாங்குளம், ஒலுமடு - தச்சடம்பனில் கத்திக் குத்துக்கு இலக்கான இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

விஜயராசா சோபிதன் (வயது - 27) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் இலங்கைக் கடற்படைத் தளபதி பிரியந்த பெரேரா உட்பட கடற்படை உயரதிகாரிகள் நேற்றுக்காலை கச்சதீவில் தென்னம்பிள்ளைகளை நட்டனர். (எ-125)

# உள்ளூர் உற்பத்தியாலேயே வாழ்க்கைத்தரம் உயரும்!

வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், பெப்.25**

**உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும்போதே பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரிக்கும். உள்ளூர் உற்பத்திகளின் விற்பனைகளை மறந்து சர்வதேச நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விற்பனை முகவர்களாக கிராம மக்கள் மாறுகின்றமை கவலையளிக்கின்றது.**

-இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு உள்ளூராட்சித் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "பேடகம்" மலர் வெளியீட்டுவிழாவில், பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதேவேளை அரச உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் தமது கடமை நேரத்தில் கைபேசியுடன் பொழுது போக்குவதை நான் நேரடியாகவே கண்டுள்ளேன். மக்களின் வரிப்பணத்தில் சம்பளத்தைப் பெறும் அரச உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியது முக்கியமான கடமை.

மக்களின் நாளாந்தத் தேவைகளை பூர்த்தி செய்தல், கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கடப்பாடுகள் பிரதேசசபை மற்றும் நகரசபைகளிடம் காணப்படுகின்றன.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகள் பிரதேச சபைகள் சுயேச்சையாக இயங்கி தங்களுக்கான வருமானங்களை ஈட்டிக் கொள்ளுதல் அவசியமாகும். ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய கிராம மட்டங்களில் மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (எ-27)

## குளிர்பான விற்பனை கச்சதீவில் அமோகம்

யாழ்ப்பாணம், பெப்.25

கச்சதீவில் குளிர்பானவியாபாரம் சூடுபிடித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. தோடம்பழச்சாறு 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. குளிர்பானங்களின் தரம் தொடர்பில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஆய்வுகளை முன்னெடுத்தனர். (ம-125)

## வங்கிச் செயற்பாடுகள் கச்சதீவில் பொலிவிழப்பு

கச்சதீவில் வங்கிச் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் பொலிவிழந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

கச்சதீவில் இந்திய பக்தர்களின் நலன்கருதி மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பன தமது சேவையை முன்னெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. நாணயப் பரிமாற்றமே முதன்மை நோக்கான சேவையாகத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், இந்திய மக்கள் திருவிழாவைப் புறக்கணித்துள்ளதால் முதல் நாளான நேற்றுமுன்தினம் வங்கிச் சேவைகள் பெருமளவு செயலிழந்திருந்தன. (ம-125)

## கைபேசி திருட்டு சந்தேகநபர் கைது!

வவுனியா, பெப்.25

வவுனியா நகரப் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் கைபேசியைத் திருடி விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, பழைய பஸ் நிலையப் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றில் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி ஒன்று திருடப்பட்டிருந்தமை தொடர்பாக வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பில் தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். திருடப்பட்ட கைபேசி நகரப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதை அடுத்து, கைபேசி மீட்கப்பட்டதுடன், அதனைத் திருடி விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)

## ஒலிம்பிக் போட்டிகள்; தயாராகும் இலங்கை

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்குத் தயாராகும் வகையில் 58 விளையாட்டு வீரர்களைக் கொண்ட அணியை, உயர் செயற்றிறன் குழுவுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பரிந்துரைத்துள்ளார்.

பாரிஸ் கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. அத்துடன், ஓகஸ்ட் மாதம்28 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை பரிஸில் பரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதன்படி, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 25 வீர, வீராங்கனைகள் 8 வெவ்வேறு விளையாட்டுத் துறைகளில் பங்கேற்கத் தயாராகி வருகின்றனர்.

அத்துடன், 19 வீரர்கள் பரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் தடகளப் போட்டிகளில் போட்டியிடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மறைவான மனச்செயலே உண்மையான அறச்செயல்




உங்கள் வலக்கை செய்வது இடக்கை தெரியாதிருக்கட்டும் (மத் 6:3) என்ற இயேசுவின் போதனை எமக்கு உணர்த்தும் செய்தி என்னவென சிந்திப்பது இக்காலத்தில் சாலச்சிறந்தது. உயிருள்ள உணர்வுள்ள மனமார்ந்த செயல்களும், உறவுகளும் என்றும் நிலைக்கும். போலி வெளிவேடச் செயல்கள் கானல் நீர்போல் மறைந்துவிடும். சமுதாயத்தில் ஒவ்வொருவரும் தேடி அலைவது உண்மையான உறவின் செயல்கள் அல்ல மாறாக போலி வெளிப்பாட்டுச் செயல்கள்தான் என்பது இன்றைய சூழலில் நாம் காணும் யதார்த்தமான நிலையாகும். செபம் செய்தல், நோன்பு இருத்தல், என்னும் இறைச்செயல்களும், தர்மம் செய்தல், அறச்செயல்கள் என்னும் மனிதச் செயல்களும் புகழும், பெருமையும், பகட்டும், ஆடம்பரமும், நிறைந்த வெளிவேடச் செயல்களாகவே அமைகின்றன. இதனால் பிறரன்பு, தாழ்ச்சி, அமைதி, இரக்கம், நீதியாகிய புண்ணியச்செயல்கள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. இதனால் நன்மையான செயல்கள் கூட உண்மையான மனத்திருப்தியையும், மகிழ்ச்சியையும் கெடுத்துவிடுகின்றன. வாழ்வில் நாம் செய்யும் சிறுசிறு செயல்களால் நாம் எதைச் சேர்த்துவைக்க நினைக்கிறோம். இறைமனித உறவையா? அல்லது எமது சுயலாபத்தையும், புகழையுமா?

எமது வாழ்வு எப்போது நான் என்ற நிலையை அழித்து மற்றவர் வாழ்வு ஏற்றமடைய உறுதுணையாக இருக்கின்றதோ அன்றுதான் நாம் உண்மையான ஊழியர்களாக மாறுகின்றோம். எமது செயற்பாடுகளில் எம்மை முன்வைக்காது, எம்மைச் சுற்றிவாழும் ஏழைகள், நோயாளிகள், பாதிக்கப்பட்டவர்கள், துன்பத்தின் மத்தியில் கரைகாணாது அலைபவர்கள், வேதனையின் விளிம்பிலே பயணிப்பவர்களுடன் எம்மை இணைத்துக் கொள்ளும்போதுதான் நாம் செய்யும் வெளியடையாளங்கள் முழுமையான அர்த்தம் பெறும். எனவே மனமார்ந்த மறைவான நேர்மையான செயல்களை இறைவனின் மகிமைக்காகவும், மற்றவர்களின் நலனுக்காகவும் செய்து உண்மையான இறைமனித உறவின் ஆழத்தையும், அன்பையும் பகிர்ந்து வாழ்வோம். இம்மண்ணில் இறையாட்சியைக் காண்போம்.

**அருட்தந்தை றமேஸ் அ.ம.தி.**

மின்கட்டண உயர்வால்

## ஒரு லட்சம் மாணவர்கள் பாடசாலை இடைவிலகல்

கொழும்பு, பெப். 25

மின்கட்டண உயர்வால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த குடும்பங்களில் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதை நிறுத்தியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியின் பாதிப்பைத் தணிக்கும் நாடாளுமன்றத் துறைக் கண்காணிப்புக் குழுவில் தெரியவந்துள்ளது.

கைத்தொழில் அமைச்சு, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சாரசபை, நிதியமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் நாடாளுமன்றத் துறை மேற்பார்வைக் குழுவில் முன்னிலையாகியிருந்தனர்.

மின் கட்டண உயர்வு காரணமாக 2023 டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் நாடு முழுவதும் 1,069,000 மின்துண்டிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் வீடுகள், தொழிற்சாலைகள், மதஸ்தலங்கள் மற்றும் பாடசாலைகள் அடங்குகின்றன.

மின்கட்டண உயர்வு காரணமாக கடந்த ஆண்டில் சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்றும் இதன்போது தெரியவந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணத் திருத்தம் விரைவில் தீர்மானம்

கொழும்பு, பெப்.25

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான பிரேரணை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு எதிர்வரும் 28 ஆம் திகதி ஒன்றுகூடவுள்ளது.

அதில் மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான யோசனை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என்று ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரசபையின் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான யோசனை கடந்த 22 ஆம் திகதி பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொருளாதார மீட்டெடுப்பு பாராட்டுகிறது அமெரிக்கா

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார மீட்டெடுப்புக்கு பாராட்டைத் தெரிவித்துள்ள அமெரிக்கா, இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் முக்கியமான பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளின் முன்னேற்றத்துக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (எ-இ)

# சீன அரசுடனான உறவு தொடர்பில் இந்தியாவின் கவலை அவசியமற்றது

## கூறுகின்றது இலங்கை

கொழும்பு, பெப்:25

இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகளுக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் இலங்கையை வேறொரு நாடு பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம் என்று வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த அவர்-

பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக இந்தியா கவலைப் படக்கூடாது. சர்வதேச நீரோட்டத்தில் இந்தியாவின் வளர்ந்து வரும் அந்தஸ்தை நாங்கள் அறிவோம். நாங்கள் எந்த நாட்டுடனும் வர்த்தகம் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை எங்களுக்கு ஒரு சிறந்த உறவு உள்ளது.

சீனாவுடனான எங்கள் உறவைப் பற்றி இந்தியா கவலைப்படக்கூடாது என்று நான் நினைக்கிறேன். சீனாவுடன் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் எங்களுக்கு நல்ல உறவு உள்ளது என்று தெரிவித்துள்ளார். (எ-இ)



# தேசியம், சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கத் தவறிவிட்டோம்

## நீதியமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 25

நாங்கள் இலங்கையர் என மார்தட்டிக்கொண்டாலும் நாட்டின் தேசிய அடையாளம் மற்றும் நாட்டின் சட்டத்தின் ஆட்சி ஆகிய இரண்டு விடயங்களையும் பாதுகாத்துக் கொள்ளத் தவறிவிட்டோம். இந்த இரண்டு விடயங்களையும் பாதுகாத்துக் கொண்டால், இந்த நாடு சிங்கப்பூரையும் விஞ்சும்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றபோது நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்த நாட்டின் அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுள்ளன என்று கூறவில்லை. எமக்கு தீர்த்துக் கொள்ள இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் செயற்படுத்துவோம்.

தலைமைத்துவத்தை வழங்கவிருந்த இளைஞர்களின் உயிர்களை இல்லாதொழித்தமை மாத்திரமே போரால் நடைபெற்றது. நாங்கள் இலங்கையர் என மார்தட்டிக் கொண்டாலும் எமது நாட்டின் தேசிய அடையாளத்தை - நாட்டின் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கத் தவறியுள்ளோம். இன, மத பேதங்கள் இன்றி, அனைவரும் ஒன்றிணைவதன் மூலம் பிரச்சினைகளை நீக்கி, பொருளாதாரத்தையும் முன்னேற்ற முடியும் - என்றார். (ச-இ)

# ஜூலை மாதம் பொதுத்தேர்தல்

கொழும்பு, பெப்.25

**எதிர்வரும் ஜூலை மாதமளவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு முதலில் பொதுத்தேர்தல் நடத்தப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

புலனாய்வு அமைப்புகளின் அறிக்கை மற்றும் உள்ளக கருத்துக் கணிப்புகளை அடிப்படையாகக் கொண்டே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பர் 18 மற்றும் ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். இதற்காக வரவு -செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், அதற்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் அதற்கான நிதி எவ்வாறு ஒதுக்கப்படும் என கேள்வி எழுப்பப்படுகின்றது. குறைநிரப்புப் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் முன்வைத்து நிதியைப் பெறலாம் எனத் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேவேளை, பொதுத்தேர்தல் நடைபெற்று முதல் தடவையாக நாடாளுமன்றம்கூடி இரண்டரை வருடங்கள் சென்ற பின்னர் அதனை எந்நேரம் வேண்டுமானாலும் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. ஆனால் இடைக்கால ஜனாதிபதி அதாவது நாடாளுமன்றம் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடை வதற்கு முன்னர் அதனைக் கலைக்கும் அதிகாரம் உள்ளதா என்ற சட்ட ரீதியிலான சர்ச்சையையும் சிலர் கிளப்பியுள்ளனர். (எ-44)

# ஆசிய நாணயம் மூலம் ஈரானுடன் வர்த்தகம்

கொழும்பு, பெப்.25

வர்த்தக நடவடிக்கைகளின்போது ஆசிய நாணயங்களைப் பயன்படுத்துவதற்கு ஈரானும் இலங்கையும் இணங்கியுள்ளன என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியனுக்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஈரானுக்கு எதிராகத் தடை விதித்துள்ள வேளையில் ஈரானுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இந்தத் தீர்மானம் உதவும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிய நாணயங்கள் என்பது யூரோவைப் போன்று ஆசிய நாடுகளிடையே பணப் பரிமாற்றத்தில் ஈடுபடுத்தப்படும் ஒரு தொகுதி நாணயங்களாகும். ஆசிய நாணயங்கள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் பட்சத்தில் டொலரில் தங்கியிருக்கத் தேவையில்லை.

கடந்த வாரம் அமெரிக்கா, ஈரான் மத்திய வங்கிக்கும் அதனுடன் தொடர்புடைய மூன்று நிறுவனங்களுக்கும் தடை விதித்திருந்தது. இதனால் ஈரானுடன் டொலரில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளமுடியாது. (எ-6)




# மது உற்பத்தி நிறுவனங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப்.25

நிலுவையாக உள்ள 4.5 பில்லியனையும் உடனடியாகச் செலுத்தவேண்டும் என்றும் இல்லையேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் 11 மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு மதுவரித்திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

நிலுவையாக உள்ள பணத்தை தவணை அடிப்படையில் செலுத்தலாம் எனவும் மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு கால அவகாசம் தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் உரையாடத் தயாராக இருப்பதாகவும் மதுவரித்திணைக்கள ஆணையாளர் நாயகம் குணசிறி தெரிவித்துள்ளார். (எ-இ)

# விபத்தை ஏற்படுத்திய மரக்கிளை அகற்றம்

முல்லைத்தீவு, பெப்.25

தேவிபுரப் பகுதியில் உயிரிழப்பை ஏற்படுத்திய ஆலமரக்கிளை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டது.

தேவிபுரம் பகுதியிலுள்ள வீதியில் தொங்கிக் கொண்டிருந்த ஆலமரக் கிளையில் சிக்கி, நபர் ஒருவர் அண்மையில் உயிரிழந்தார். கிராம அலுவலரும், கிராம பொது அமைப்புகளும் புதுக்குடியிருப்புப் பிரதேசசபைக்கு விடுத்த வேண்டுகோளுக்கமைய குறித்த ஆலமரக்கிளை புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டது. (ப-13)


## தவறவிடப்பட்டது

DAG-3975 இலக்கமுடைய சிறிய வானின் அனுமதிப்பத்திரம் யாழ் நகர்ப்பகுதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கண்டெடுத்தவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு: 077 798 9464

ER 41882) V-1


# புலம்பெயர் இலங்கையர் கணக்கெடுப்பு விரைவில்

கொழும்பு, பெப். 25

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களைக் கணக்கெடுக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று வெளிநாடு வாழ். இலங்கையருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் வீ.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்படும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையர்கள் இதுவரையில் 5 அலையாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். 2.53 மில்லியன் வரையில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்திருப்பதாக அண்ணளவாகக் கணக்கிட்டுள்ளோம். அவர்களில் 1.6 மில்லியன் பேர் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக உள்ளனர். ஏனைய காரணங்களுக்காக புலம்பெயர்ந்தவர்கள் பற்றிய தகவல்கள் சரியான வகையில் இல்லை. விரைவில் மற்றைய தூதரகங்களைத் தொடர்புகொண்டு இவர்கள் பற்றிய தகவல்களை நாம் சேகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# முரண்பாடுகளைக் களைந்து ரணில் அரசை வீழ்த்துவோம்!

## ஹிருணிகா அழைப்பு

கொழும்பு, பெப். 25

**கட்சிக்குள் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொண்டிருப்பதை விட, பிரதான எதிரியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்துவதற்கான வியூகத்தை வகுப்பதே காலத்துக்குப் பொருத்தமானதாகும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்திக்குள் இரட்டை நிலைப்பாட்டில் பலர் உள்ளனர். கட்சிக்குள் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டிருக்காமல் பிரதான எதிரியான ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவைத் தோற்கடிப்பதற்கான வியூகத்தை அனைவரும் இணைந்து வகுக்கவேண்டும்.

சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து தோற்கடிக்க வேண்டிய நபர் ரணில் விக்கிரமசிங்க ஆவார். எனவே, அதற்கு அனைவரும் தயாராக வேண்டும். அதேவேளை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவார்- என்றார். (ச-இ)

# மாமியாரை கொன்ற மருமகன்

கொழும்பு, பெப். 25

வாய்த்தர்க்கம் காரணமாக மருமகனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மாமியார் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வைரமுத்து கோமதனி (வயது- 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

மதுபோதையில் வந்த மருமகன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரான மருமகன் தப்பிச் சென்ற நிலையில் அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# மஹிந்த கைகாட்டினால் மக்கள் வாக்களிப்பராம்



கொழும்பு, பெப்.25

மஹிந்த ராஜபக்சவை நேசிக்கும் மக்களே இந்தநாட்டில் உள்ளனர். அவர் களமிறக்கும் வேட்பாளரை வெற்றிபெற வைப்பதற்கு மக்கள் தயாராக உள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி எமது தரப்புக்குச் சவால் அல்ல. ஏனெனில் அந்தக் கட்சியின் தலைவரிடம் தலைமைத்துவப் பண்பு கிடையாது. இதை நாம் கூறவில்லை, அந்தக் கட்சியின் உறுப்பினர்கள்தான் குறிப்பிட்டுவருகின்றனர். நாம் களமிறக்கியுள்ள அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் வெற்றிபெற்றுள்ளனர்.

இம்முறையும் வெற்றி வேட்பாளர் களமிறக்கப்படுவார், மஹிந்த ராஜபக்ச பெயரிடும் வேட்பாளரை வெற்றிபெற வைப்பதற்கு நாட்டு மக்கள் தயாராகவே உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-44)

# ரணில் புகழ்பாடும் சாந்த சன்னஸ்கல!

கொழும்பு, பெப்.25

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் ஒப்பிடும் போது ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க மிகப் பெருத்தமானவர் என சமூக ஆர்வலரும் ஆசிரியருமான உபுல் சாந்த சன்னஸ்கல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

சஜித் பிரேமதாஸ முட்டாள்தனமான மனிதர். அவருடன் பழகியபோது அதனைப்புரிந்துகொள்ள முடிந்தது. சஜித் பிரேமதாஸ என்பவர் மேடைகளில் கூறுவதைப் போல் இரவில் வேலை செய்யும் நபர் அல்லர்.

அதேபோல் அநுரகுமார திஸாநாயக்க, மக்கள் அறிந்துள்ள ஊழல், மோசடிகள் பற்றி மீண்டும் உரத்த குரலில் கூறுவதை மட்டுமே செய்து வருகிறார். பொருளாதாரமோ அல்லது நாட்டை கட்டியெழுப்பும் எவ்வித புதிய கொள்கைத் திட்டங்களோ அவரிடம் இல்லை -என்று தெரிவித்துள்ளார்.

உபுல் சாந்தசன்னஸ்கல, ஒரு காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியில்

இணைந்து செயற்பட்டதுடன் பொதுத் தேர்தலில் அந்தக் கட்சியின் வேட்பாளராக கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிட்டுள்ளார். புத்தரை அவமதிக்கும் வகையில் 'Budunge Rasthiyaduwa' என்ற நூலை வெளியிட்டமைக்காக 2022 ஆம் ஆண்டு சன்னஸ்கல கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (எ-இ)

# வெளிநாட்டில் வேலை ரூ.100 கோடி 'அபேஸ்'

## பெண் கைது


கொழும்பு, பெப். 25

ஜப்பானில் வேலை வாங்கித் தருவதாகத் தெரிவித்து கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்த 51 வயதான பெண்ணொருவர் நீர்கொழும்பில் வைத்து விசேட மோசடி விசாரணைப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் 250 பேரிடமிருந்து சுமார் 100 கோடி ரூபாவைப் பெற்று ஏமாற்றியுள்ளார் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட மோசடிப் பிரிவுக்கு இவர் மீது சுமார் 180 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சந்தேகநபருக்கு மஹர நீதிவான் நீதிமன்றத்தால் 36 பிடியாணைகளும், கடுவெல நீதிவான் நீதிமன்றால் 11 பிடியாணைகளும் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் பல்வேறு பகுதிகளில் பதுங்கியிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)



# தொழிற்பயிற்சி நிறுவனங்களை கல்லூரிகளாக மாற்றத் திட்டம்!

கொழும்பு, பெப்.25

தொழிற்பயிற்சி நிறுவனங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து தொழிற்பயிற்சிக் கல்லூரியாக மாற்ற வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரத்மலானையிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்துக்குச் சென்று மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய நவீன உலகத்தில் தொழிற்சந்தைக்கு தொழிற்பயிற்சி அவசியம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேலதிக தகவல்களுக்கு :
+94 77 773 6713 (மனோஜ்)
24/7 (94) 117 999 777
SILVER PUMPS & MOTORS
Hayleys Aventura Innovative Solutions
The World Of Hayleys


## மாவாவுடன் ஐவர் கைது

மாவாப் போதைப் பாக்கை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். உடுப்பிட்டிப் பகுதியில் வாகனம் ஒன்றில் 500 கிராம் மாவாப் பாக்கைக் கொண்டு சென்றபோது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-100)

## MILO Football Champs 2024

### இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான வட மாகாண உதைப்பந்தாட்டப் போட்டிகள் - 2024

கல்வி அமைச்சின் மேற்பார்வையிலும், நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ வர்த்தக நாமத்தின் அனுசரணையிலும் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 10 மற்றும் 12 வயதுக்குட்பட்ட வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி நிகழ்வின் முதல் சுற்று 05 மாவட்டங்களில் நடைபெறவுள்ளது. அதாவது 24.02. 2024 அன்று மன்னார் மாவட்டத்திலும், 02.03. 2024 அன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும், 09.03.2024 அன்று வவுனியா மாவட்டத்திலும், 16.03.2024 அன்று கிளிநொச்சி மாவட்டத்திலும், 22.03. 2024 அன்று யாழ்ப்பாண மாவட்டத்திலும் நடைபெறவுள்ளது. இந்த மாவட்டமட்ட போட்டிகளில் 05 மாவட்டங்களிலிருந்தும் 250 அணிகளும் 3750 விளையாட்டு வீர,வீராங்கனைகளும் பங்குபற்றுகின்றனர். இப்போட்டிகள் 23.03.2024 அன்று யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நடைபெறும். இத்திட்டத்தின் மூலம் வட மாகாணத்தில் முதன்முதலாக உதைபந்தாட்ட விளையாட்டில் நுழையும் இந்த இரு வயதுப் பிரிவு வீர, வீராங்கனைகளின் உதைபந்தாட்ட விளையாட்டை விருத்திசெய்து, விளையாட்டு வீர,வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்தும் வாய்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பயிற்சிகளை வழங்கி, மாவட்ட அணிகளை அமைத்து பயிற்சிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த மாவட்ட அணிக்கு, மாதத்திற்கு நான்கு நாட்கள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பாடசாலை சங்கத்தின் திறமையான பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனை கல்வி அமைச்சு மற்றும் வடமாகாண கல்வி திணைக்களத்தின் மேற்பார்வையுடன் இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்தி வருவதுடன், நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ வர்த்தகநாமம் அனுசரணை வழங்குகின்றது.

பல தசாப்தங்களாக இலங்கைப் பாடசாலைகளில் அடிமட்ட விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கும் விளையாட்டுகளில் பன்மைத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் நெஸ்லே மைலோ, ஊட்டச்சத்தின் மூலம் சிறுவர்களை முன்னேற்றும் நோக்குடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.



## 29 பவுண் நகை திருட்டு மேலும் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.25

வல்வெட்டித்துறையில் கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி 29 பவுண் நகை திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவால் கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை இருவர் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-100)


www.aatsl.lk

aat SRI LANKA



සිංහල
English
தமிழ்

A/L இற்கு பிறகு

எனது வெற்றிகரமான தொழிற்சார் பயணத்திற்கான முதற்படி

உயர்தர பரீட்சை முடிவுகளுக்கு முன்னரே தொடங்க கூடிய வாய்ப்பு

இன்றே பதிவு செய்யுங்கள்

2024 ஜூலை பரீட்சைக்கு

உயர்தர பரீட்சையின் பின்னர் நீங்கள் ஏன் AAT உடன் பதிவு செய்ய வேண்டும்?

- உயர்ந்த அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள குறைந்த செலவிலான தொழிற்சார் தகுதி.
- 01 வருடத்திற்குள் முழுமையாக நிறைவு செய்ய முடியும் (விலக்களிப்புகளுடன்)
- AAT கற்கும்போதே தொழில்வங்கியூடாக தொழில் வாய்ப்பொன்றை தேடிக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும்.
- நீங்கள் AAT இனை நிறைவுசெய்த பின்னர் CA / CMA / CIMA / ACCA / HNDA ஆகிய கற்கைநெறிகளில் அதிக விலக்களிப்புகளை பெற முடியும்.
- 01 வருட தொழிற்பயிற்சியை நிறைவு செய்த பின்னர் நீங்கள் AAT உறுப்புரிமைக்கு விண்ணப்பிக்க முடியும்.

✓ நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள்.
✓ பௌதீக வகுப்புகள் (சாதாரண).
✓ நிகழ்நிலை (Online) வகுப்புகள்.
✓ மிகக்குறைந்த பதிவுக்கட்டணம்.
✓ தொழில் சந்தையில் அதிக கேள்வியுடைய தொழில்சார் தகுதி.

மேலதிக தகவல்களுக்கு SCAN செய்யுங்கள்

இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்
0777 559 669 | 0112 559 669


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீபிருந்திரனின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 25

கலாநிதி எஸ்.ஸ்ரீபிருந்திரனின் 'இலங்கையில் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி' நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மஹரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவக கலாநிதி சி.டபிள்யூ.டப்ளியூ. கன்னங்கர மண்டபத்தில் கொழும்புப் பல்கலைக்கழக சட்டபீடப் பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினராக தேசிய கல்வி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பிரசாத் சேதுங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். வெளியீட்டுரையைப் பேராசிரியர் சி.மௌனகுரு ஆற்றுவதுடன், நூலின் முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்ளவார். (ச)

# அனர்த்த முகாமைத்துவத்தை கட்டுமானங்களில் பேணுக!

### வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 25

பொறியியல்துறை மற்றும் நிர்மாணத் துறைகளின் திட்டமிடல்களின்போது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். இதன்மூலம் தேவையற்ற அனர்த்தங்களைத் தவிர்க்கலாம் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் வட பிராந்திய சங்கத்தினரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட 'தொழில்நுட்ப வழிகாட்டி' நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொறியியல் மற்றும் கட்டுமானத்துறைகளில் திட்டமிடல் என்பது மிக முக்கியமான ஒரு விடயம்.

அனர்த்தங்கள் தொடர்பான பகுப்பாய்வுகள் தொடர்பிலும் முன்னரே ஆராய்ந்து பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். எவ்வித முன் ஆய்வுகளுமின்றி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுவதனாலேயே மழைகாலங்களில் வெள்ளம் தேங்குதல் உள்ளிட்ட தேவையற்ற அனர்த்தங்கள் ஏற்படுகின்றன- என்றார். (ச-26)




## நூல் வெளியீடு

கரவெட்டி, பெப்.25

கரவெட்டி தெற்கு, மேற்குப் பிரதேசசபையின் 'பேடகம்' நூல் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை மாலை 4:30 மணிக்கு பிரதேசசபைச் செயலாளர் க.கம்சநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், ஜனாதிபதியின் வடக்கு மாகாண இணைப்புச் செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ. வரதீஸ்வரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ. பிரணவநாதன், யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் பொ.சிறிவர்ணன், புவியியற்றுறை விரிவுரையாளர் செ.ரவீந்திரன், விரிவுரையாளர் வேல்நந்தன், விரிவுரையாளர் அஜந்தகுமார், நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீர, நெல்லியடி வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பருத்தித்துறைப் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-100)

சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த 5 மாணவர்களுக்கு சாவகச்சேரி பெரிய மாவடியைச் சேர்ந்த நவன் விரும்பி ஒருவரின் நிதிப்பங்களிப்பில் அண்மையில் பாதணிகள்,புத்தகப்பைகள்,குடிதண்ணீர்ப் போத்தல்கள் வழங்கப்பட்டன. (ச-9)



## பெண்கள் இருவர் மாரடைப்பால் சாவு

யாழ்ப்பாணம், பெப். 25

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மாரடைப்புக் காரணமாக கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளனர்.

நெஞ்சுவலி காரணமாக இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளனர். சு.ஸ்ரீலதா (வயது-64), ம.பூமணி (வயது-65) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.தவமலர் மேற்கொண்டார். (ச-131)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியர் பாராதீஸ் கலந்து கொண்டார். (ப-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்கு தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக் கூடும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். விற்பனையும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சி தரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். கடன் திரும்பக் கிடைக்கக்கூடும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.25

தென்மராட்சிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனப் பொதுக்கூட்டம், சாவகச்சேரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அனைத்து இளைஞர் கழக நிர்வாகத்தினரும் இளைஞர் கழக உறுப்பினர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டுமென நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மனிதத் தொல்லை!

வவுனியாவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 67 யானைகள் இயற்கைக்கு முரணான இறப்பைச் சந்தித்துள்ளன. துப்பாக்கிச்சூடு நடத்தியும் - வெங்காய வெடிவைத்தும் கொல்லப்படுதல், மின்வேலிகள் மற்றும் புதைகுழிகளில் அகப்பட்டு இறத்தல், ரயில் மோதல்களில் பலியாதல் எனப் பலவகையான துர்மரணங்களை இந்த யானைகள் சந்தித்திருக்கின்றன. அத்துடன் கடந்த மூன்றாண்டுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு குரங்குகளால் விளைநிலங்களும் விவசாய உற்பத்திகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவலும் இப்போது தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த இரு தரவுகளும் தகவல்களும் வடமாகாணத்திலும் இலங்கையிலும் அதிகரித்துவரும் 'மனித விலங்கு' வாழிட மோதலையே காலக் கண்ணாடியாகக் கட்டியம் செய்கின்றன.

இலங்கையில் விவசாயிகளுக்கும் வன விலங்குகளுக்கும் இடையிலான வாழிட மோதல் இன்று நேற்று நடப்பதல்ல. நீண்டதும் நெடியதுமான தொடர்கதை இது. கடந்த பலவருடங்களாகவே வன விலங்குகளால் குறிப்பாக யானைகள் மற்றும் குரங்குகளால் ஏற்படும் பயிரழிவுகள் மற்றும் விவசாய அழிவுகள் தொடர்பில் விவசாயிகள் தொடர்ச்சியாக முறையிட்டுக் கொண்டுதான் உள்ளனர். இதன் விளைவான உச்சப் பாதிப்பாக, விவசாயத்தைக் கைவிட்ட விவசாயிகளும், வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களும் இலங்கையில் ஏராளம். ஆனால், இந்த 'மனித விலங்கு' வாழ்விட மோதல் ஏன் ஏற்படுகின்றது? எதற்காக குரங்குகளும் வன விலங்குகளும் மனித வாழ்விடங்களுக்குள்ளும், விவசாய நிலங்களுக்குள்ளும் ஊடுருவுகின்றன என்ற கேள்விகளை நியாயமான அடிப்படையில் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் தயாரில்லை.

உண்மையில் விலங்குகள் மனிதர்களுடைய வாழ்விடங்களுக்குள் வரவில்லை. மனிதர்களாகிய நாம்தான் விலங்குகளின் வாழ்விடங்களுக்குள் எதேச்சதிகாரமாக அத்துமீறியிருக்கின்றோம். கடந்த பத்து வருடங்களுக்கு முன்பிருந்த வனாந்தரங்கள் இன்றில்லை. தமிழர் தாயகமாக இருந்தாலும் சரி அல்லது 'ஒரு நாடு என்ற ரீதியில்' இலங்கையாக இருந்தாலும் சரி எங்கும் கட்டடக் கானகங்கள்தான் இப்போது எஞ்சி நிற்கின்றன. காலாகாலமாக விவசாயப் பகுதிகளாக இருந்த நிலங்களை இப்போது கட்டடங்கள் ஆக்கிரமித்திருக்க, விவசாய நிலங்கள் வனாந்தரங்களில் புதிதாக உருவாக்கப்படுகின்றன. மனிதர்களின் இந்தச் செயற்பாட்டால் உணவுப்போட்டியும் உறைவிடப் போட்டியும் விலங்குகளிடத்தில் வலிந்து ஏற்படுத்தப்படுகின்றது. தமக்கான உணவு மூலங்கள் அழிக்கப்பட்ட நிலையில், உறைவிடங்கள் இழக்கப்பட்ட நிலையில், இதன் தொடர்ச்சியாகத்தான் உணவைத் தேடியும், உறைவிடங்களைத் தேடியும் விலங்குகள் மனித வாழ்விடங்களுக்குள்ளும்-விவசாய நிலங்களுக்குள்ளும் ஊடுருவுகின்றனவே அன்றி - இதில் குரங்குகளின் - யானைகளின் தவறென்று என்னதான் உள்ளது?

இலங்கையில் அதியுச்ச வேகம்பெற்றுவரும் 'மனித விலங்கு' வாழிட மோதல்களைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், அல்லது தவிர்க்கவேண்டுமாயின் வனாந்தரங்களின் இருப்பை முதலில் உறுதி செய்யுங்கள். காடுகளின் அழிப்பைத் தடுத்து நிறுத்துங்கள். காடுகளின் இருப்பும் - அளவும் குறுகக் குறுக விலங்குகள் காடுகளை விட்டு வெளியில் செல்லும் என்பது இயற்கை நியதி. யதார்த்தமும் அதுவே. அவற்றின் உல்லை நாள்தோறும் நாம் ஆக்கிரமித்துக் கொண்டால், அவையும் பாவம் எங்குதான் செல்லும்?




# சாந்தன் தாயகம் வர இந்திய அரசு அனுமதி

**கொழும்பு, பெப். 25**

**ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட சாந்தனை இலங்கைக்கு அனுப்ப மத்திய அரசு அனுமதிக் கடிதத்தை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அனுப்பியுள்ளது.**

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்தவரான சாந்தன் 2022ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டு திருச்சியிலுள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார். அங்கு உடல்நலம் மோசமாகப் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனவரி 24 ஆம் திகதி அவர் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் சாந்தனை இலங்கைக்கு அனுப்ப மத்திய அரசு அனுமதிக் கடிதத்தை அனுப்பியுள்ளது. (ச-இ)

## மத்தியவங்கி பணம் மாயம்; இதுவரை கண்டறியவில்லை

மத்தியவங்கியின் பெட்டகத்திலிருந்து ஐம்பது இலட்சம் ரூபா காணாமற்போனமை தொடர்பில் இதுவரை எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்தியவங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து இந்தப் பணம் காணாமற்போய் பல மாதங்கள் கடக்கின்றன.

நவீன தொழில்நுட்ப பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ள மத்தியவங்கிக் கட்டடத்தின் உயர் பாதுகாப்புப் பகுதியில் அமைந்துள்ள அலுமாரியிலிருந்தே இந்தப் பணம் காணாமற்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 23 அதிகாரிகளிடம் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## மின் நுகர்வு உயர்வு; மின்உற்பத்தி குறைவு

கொழும்பு, பெப். 25

நீர்மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் மின்சார உற்பத்தி தற்போது குறைந்துள்ளது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை நாளாந்த மின்சார தேவை 47 கிகாவாட் மணிநேரமாக அதிகரித்துள்ளது. ஜனவரி 23 ஆம் திகதி வரை 50 வீதமாக இருந்த நீர்மின்சாரம் மற்றும் மின்சார உற்பத்தி தற்போது 35 வீதம் வரை குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## குழந்தைகள் நிறை குறைவு

கொழும்பு, பெப். 25

நாட்டில் எடைகுறைவான குழந்தைகளின் வீதம் மேலும் அதிகரித்துள்ளது என்று சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள சுகாதார மற்றும் போஷாக்குப் பணியகம் தெரிவித்துள்ளது.

குழந்தைகளின் எடைகுறைவு 2022 ஆம் ஆண்டில் 19.5 வீதமாகவும், 2023 ஆம் ஆண்டில் 21 வீதமாகவும் பதிவாகியுள்ளது. (ச-இ)

புதிய வரி இலக்கம்

## அமைச்சரவைக்கு அடுத்தவாரம்

இலங்கையில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள வரி எண்ணை (ரின்) அடிப்படையாகக்கொண்டு தேசிய அடையாள அட்டைகளை வழங்குவது தொடர்பான யோசனை அடுத்த வாரம் அமைச்சரவையில் முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்கான அமைச்சரவைப்பத்திரம் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு அதே இலக்கத்தையே ரின் இலக்கமாகப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்து அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படவுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

**26.02.2024**

**திங்கட்கிழமை**

**மாசி–14**

சுபநேரம் : 12.29 –01.59

ராகுகாலம் : 07.59 – 09.29

**நாளொரு நல்வார்த்தை**

"எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் உங்கள் கஷ்டங்கள் மட்டும் எப்படி நிரந்தரம் ஆகும்? கவலையை விடுங்கள். வாழ்க்கையை முதலில் வாழத் தொடங்குங்கள்."

– அன்னை தெரேசா–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உக்ரைனின் தோல்வி எதிரொலி



# பெலாரஸ் அருகாக நேட்டோப் படைகள்

### அணுவாயுதங்களை வழங்குமாறு ரஷ்யாவிடம் பெலாரஸ் கோரிக்கை

**மொஸ்கோ, பெப். 25**

**ரஷ்யாவுக்கு எதிரான போரில், அண்மைக்காலமாக உக்ரைன் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரஸ்க்கு மிக அருகாக நேட்டோ படைகள் நிறுத் தப்பட்டுள்ளன.**

அண்மைக்காலமாக போரில் ரஷ்யா மிகப் பெரிய ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. அவ் திவ்கா நகரம் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டுள் ளது. அந்தநகரம்கிரீமியக்குடாவைப்போன்று ரஷ்யாவுடன் இணைக்கப்படும் என்று கருதப் படும் நிலையில், ரஷ்யாவின் மிகநெருங்கிய நட்பு நாடான பெலாரஸ்க்கு மிக அருகாக நேட்டோ துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளன.

பிராந்தியத்தில் ரஷ்யா மற்றும் பெலாரஸை அச்சுறுத்தும் வகையில் 32 ஆயிரம் நேட்டோ துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளன. தற்காப்பு நடவடிக்கைக்காக ரஷ்யாவின் அணு ஆயு தங்களைப் பெலாரஸில் நிலைநிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது என்று பெலாரஸ் ஜனாதி பதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரி வித்துள்ளார். (ம)

## சூரியனின் ஆற்றல்; ஆதித்யா ஆராய்வு

புதுடில்லி, பெப். 25

சூரியனின் கரோனா பகுதியிலிருந்து வெளி யான ஆற்றலின் தாக் கத்தை ஆதித்யா விண் கலம் கண்டறிந்துள்ள தாக இஸ்ரோ தெரிவித் துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பில், "சூரியப் புயல்கள் குறித் தும் அதிலுள்ள ஆற்றல் அயனிகள் பற்றியும் ஆய்வுகளை மேற் கொள்வதற்காக விண் கலத்தில் 'பாபா' எனும் பிளாஸ்மா பகுப்பாய்வு கருவி பொருத்தப்பட் டுள்ளது. இந்தக் கருவி தற்போது சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. அடுத்த மாதம் 10ஆம் மற்றும் 11ஆம் திகதிக ளில் சூரியனின் வெளிப் புறப் பகுதியில் இருந்து அளவுக்கதிகமான ஆற்றல் துகள்கள் வெளியானதை இந்த விண்கலம் கண்டறிந் துள்ளது" - என்று குறிப் பிடப்பட்டுள்ளது. (ம)

## ரஷ்யாவுக்கு எதிராக 500 பொருளாதாரத் தடைகள்

### அமெரிக்கா நெருக்குவாரம்

வொஷிங்டன், பெப். 25

உக்ரைனுக்கு எதிரான போர் மற்றும் அலெக்சி நவால்னியின் படுகொலை உள்ளிட்ட காரணங்களுக்காக ரஷ்யா மீது சுமார் 500க்கும் மேற்பட்ட பொரு ளாதாரத் தடைகளை அமெரிக்கா அறி வித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான போரில் அண் மைக்காலமாக ரஷ்யா எழுச்சிபெற்று வருகின்றது. அத்துடன் சிறைக்குள் உயிரிழந்த ரஷ்ய எதிர்க்கட்சித் தலை வரான அலெக்சி நவால்னியின் இறப் புக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் அமெரிக்கா தள்ளப்பட்டிருந்தது. இவ்விரு விடயங்க ளையும் கருத்திற்கொண்டு சுமார் 500 க்கும் மேற்பட்ட பொருளாதாரத் தடைகளை ரஷ்யாவுக்கு எதிராக அமெ ரிக்கா அறிவித்துள்ளது. (ம)

## விவசாயிகளின் போராட்டம் இந்தியாவில் இடைநிறுத்தம்

புதுடில்லி, பெப். 25

விவசாய விளைபொருள்களுக்குக் குறைந் தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட கோரிக்கை களை வலியுறுத்தி இந்திய விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டம் எதிர் வரும் 29ஆம் திகதிவரை நிறுத்தப்பட்டுள் ளது.

விவசாயிகளின் பேரணிக்கு புதுடில்லி மாநில அரசு தனது முழுமையான ஆத ரவை வழங்கியுள்ளது. ஆதலால், பேரணி புதுடில்லியை அடைந்தால் அங்கு உல கமே திரும்பிப் பார்க்கும் வகையில் விவ சாயிகளின் போராட்டம் எழுச்சியுறும் என்று கருதப்பட்ட நிலையில், அரசாங்கத்துட னான பேச்சுகள் மற்றும் போராட்ட ஒருங்கி ணைப்புப் பணிகள் என்பவற்றுக்காக எதிர் வரும் 29ஆம் திகதிவரை போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம)

## காஸாவில்

# இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து நடமாடும்!

### நெதன்யாகு தெரிவிப்பு




டெல்அவிவ், பெப். 25

போர் முடிவுக்கு வந்த பின்னரும், காஸா வில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து சுதந்திரமாக நடமாடும் வகையிலான ஏற் பாடுகள் செய்யப்படும் என்று இஸ்ரேலி யப் பிரதமர் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

காஸா போருக்குப் பிந்தைய திட்டம் குறித்த விவரங்களை பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்டிருக்கிறார். நெதன்யாகு தனது அமைச்சரவை யின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்த அறிக்கையிலேயே,

"காஸா முழுவதும் இஸ்ரேல் இரா ணுவம் சுதந்திரமாகச் செயற்படும். மேலும், காஸாவுக்குள் ஒரு பாது காப்பு மண்டலத்தை நிறுவும்" என் றும் நெதயன்யாகு குறிப்பிட்டுள் ளார். நெதன்யாகுவின் இந்தத் திட்டத்துக்கு உலக நாடுகள் பலவும் தமது கண்டனங்களையும் எதிர்ப் புகளையும் தெரிவித்து வருகின் றன. (ம)

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 240 மில் லியன் ஆண்டு கால 16 அடி நீளமுடைய ட்ராக னின் புதைபடிவத்தைக் கண்டுபிடித்துள்ளனர். நீளமான நீர்வாழ் ஊர்வனமான இது, நீண்ட கழுத்தைக் கொண்டு காணப்படுவதனால் ட்ராகன் இனம் என அடையாளப்படுத்தப்பட்டுள் ளது. இந்தக் கண்டுபிடிப்பு ஒரு சர்வதேசக் குழு வால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஸ்கொட் லாந்தின் தேசிய அருங்காட்சியகங்களில் விரைவில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Abans
சிறுகச் சிறுக
Pay

மாதாந்த தவணை
ரூ. 6,750/-

18 மாத அபான்ஸ் நம்பகமான உத்தரவாதம்

Abans
GREEN PRO

சூப்பர் சேவர்
குளிர்சாதனப்பெட்டிக்கு
சிறந்த சேமிப்பு



சிறுகச் சிறுக
Pay
பண்ணுங்க
18
மாதங்கள் வரை
செலுத்துங்கள்

10 YEAR WARRANTY COMPRESSOR

துரு பிடிக்காமல் நீடித்துழைக்கும் கொப்பர் டியூப்

75W செலவாகும் செயல்திறன்மிக்க மின்சார சேமிப்பு

குளிர்ச்சியை சிறப்பாக பாதுகாக்கும் தடித்த சுவர்கள்

R600a சூழல் நட்புறவுமிக்க குளிர்பதன வாயு

தேவையான அளவு உதிரிப்பாகங்கள் உள்ளன

விற்பனையின் பின்னர் நம்பகமான சேவை

குறைந்த விலையில் மிகச்சிறந்தவைகளுக்கு
சிறுகச் சிறுக செலுத்துங்கள்.

| தள்ளுபடி ரூ.38,000 இலிருந்து | |
|---|---|
| சாதாரண விலை ரூ. ~~119,990~~ இலிருந்து | மாற்றீடு விலை ரூ.81,990 இலிருந்து |

ABSGDH

0115 999 000

Commercial Bank, Sampath Cards, HNB, Seylan, People's Bank, HSBC, Nations Trust Bank, Standard Chartered, NDB bank, Amana Bank, LOLC Finance

நிபந்தனைகள் உண்டு. நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் மற்றும் அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத இறைச்சி: சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், பெப். 25

அனுமதிப்பத்திரமின்றி இரண்டு ஆடுகளை இறைச்சியாக்கிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான ஆடுகளை இறைச்சியாக்கியபோதே சந்தேகநபர் கட்டுடையில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். சந்தேகநபரிடமிருந்து 100 கிலோ ஆட்டிறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

(ஓ-23)

## சங்கிலி அறுப்பு

வவுனியா, பூந்தோட்டத்தில் வியாபார நிலையத்துக்குச் சென்ற இருவர் வியாபார நிலைய உரிமையாளரான பெண் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு நேற்று தப்பிச் சென்றுள்ளனர்.

வியாபார நிலையத்துக்குச் சென்ற இருவர் பீடி தருமாறு கூறியதுடன், பெண் பீடியை எடுத்துக் கொண்டு நின்ற போது அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

(ஓ-18)


### வீடு வாடகைக்கு

பருத்தித்துறை - கீரிமலை பிரதான வீதி தொண்டமானாறு சந்தியில் நான்கு அறைகள், பெரிய ஹோல், இணைந்த குளியலறைகள் 2 ,வாகனங்கள் தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. வங்கி, நிறுவனங்கள், காரியாலயங்களுக்கும் உகந்தது.
வீட்டின் ஒரு பகுதியாகவும் கொடுக்கப்படும்.

076 638 5579

(CR/418771) J-1

### கணிதம்

தரம் 6 - O/L வரையான வகுப்புகள் தனியாகவோ, குழுவாகவோ வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:- 077 712 2968

(CS/541151) J-1

### காணி விற்பனைக்கு

இயக்கச்சி A9 வீதியினை முகப்பாகக் கொண்ட 50 ஏக்கர் காணி விற்னைக்குண்டு.

077 721 4764

### தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள உணவகத்திற்கு பரோட்டா, தந்தூரி நாண் செய்பவர், சுத்தம் செய்பவர், பெண் வரவேற்பாளர் தேவை.

075 440 5362

### Vacancy

நிர்வாக அலுவலர் (பெண்)
பிரபல நிறுவனத்திற்கு ஆங்கிலம், ICT அறிவுள்ள 30 வயதிற்குட்பட்ட நிர்வாக அலுவலர்க்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.
ஞாயிற்றுக்கிழமைக்குமுன் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம்: 25,000/-

074 264 0484

(CS/29351) J-1

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதி, கொட்டடியில் இரண்டு (02) பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 763 4869
075 071 3047

### குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு

Samsung Refrigerator (Double door), Digital inverter 216 L சில மாதங்களே பாவனையில் உள்ளது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
125, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:- 076 698 0531

(CS/54113) J-1

### வேலையாள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றுக்கு O/L சித்தியடைந்த, கணினி மற்றும் ஆங்கில அறிவுடைய (Data Entry) 25 வயதுக்கு உட்பட்ட திருநெல்வேலியை அண்டிய பகுதியில் வசிக்கும் ஆண் பணியாளர் தேவை.

தொடர்பு:- 077 663 6384

(CS/279834) J-1

### மரண அறிவித்தல்

தோற்றம் 26 - 03 - 1950



மறைவு 19 - 02 - 2024

சுப்பையா நடேசலிங்கம்

மஞ்சத்தடி தெற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை ( Egly) வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நடேசலிங்கம் கடந்த திங்கட்கிழமை 19.02.2024 பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா (தொண்டர்) - கனகம்மா தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான ராஜதுரை - அனா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கலைச்செல்வியின் அன்புக் கணவரும், பிரசாத்தின் அன்புத் தந்தையும், சாமினியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், இளையதம்பி, சிவராசா, இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மைக்கல், இராசதுரை மற்றும் குமார், இராஜேஸ்வரன், கமலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (27.02.2024) செவ்வாய்க்கிழமை மதியம் 11.45 - 12.45 பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன்
பெறாமகன் - 0764354615

(CS/54094) J-1

## மரண அறிவித்தல்



### சண்முகம் பொன்னையா பாலசிங்கம்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை, வாழ்விடமாகவும், தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீலங்கா நிர்வாக சேவை முன்னாள் யாழ். மாவட்ட உதவி அரச அதிபராகப் பணியாற்றி இளைப்பாறிய சண்முகம் பொன்னையா பாலசிங்கம் அவர்கள் கடந்த 21.02.2024 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பொதுநிருவாக உள்நாட்டு அமைச்சில் முகாமைத்துவ உத்தியோகத்தராகவும், முன்னாள் யாழ். மாவட்ட, அமைச்சரின் இணைப்புச் செயலாளராகவும், யாழ். விற்பனைத் திணைக்கள உதவி ஆணையாளராகவும், நல்லூர், அச்சுவேலி கிராம சபைகளின் விசேட ஆணையாளராகவும், நாயன்மார்கட்டு இராசஇராஜேஸ்வரி (பேய்ச்சி அம்மன்) தேவஸ்தானத் தலைவராகவும், இன்னும் பல சேவைகளை ஆற்றியவராவார். மேலும் இவர் கனடாவில் யுத்தகால ஊனமுற்றோருக்கு உதவும் பணியகத்தில் (War Amps, Canada) கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னர், நீண்டகால தொண்டனாக 50 Tuxedo Court கட்டடப் பிரதிநிதியாக கடமையாற்றியவருமாவார்.

அன்னார் நாயன்மார்கட்டு காலஞ்சென்ற போதிய பணக்காரன் சின்னத்தம்பி சண்முகத்தின் பேரனும், காலஞ்சென்ற பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏக புத்திரனும், கொக்குவில் காலஞ்சென்ற செல்லப்பா சோமசுந்தரம் - பவளம்மா தம்பதியரின் மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், வாசுகி (அமெரிக்கா), பாலரவி (அமெரிக்கா), ஜானகி (அமெரிக்கா), தேவகி (அமெரிக்கா), சித்ரா - MD (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜேந்திரன் பொன்னுத்துரை (அமெரிக்கா), பாவனி - MD (அமெரிக்கா), சுகுமார் சண்முக ரட்ணம் (அமெரிக்கா), ரவிச்சந்திரன் ரட்ணசிங்கம் (அமெரிக்கா), ரவீந்தர் Tikoo -MD (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும், Sophia (அமெரிக்கா), Sonia - MD & Anand (அமெரிக்கா), Julia & Ranga (அமெரிக்கா), Sanje (அமெரிக்கா), Ramyiah (அமெரிக்கா), Dhanesh (அமெரிக்கா), Kiran (அமெரிக்கா), Jay (அமெரிக்கா), அவர்களின் அன்பார்ந்த பேரனும், காலஞ்சென்ற இராசலெட்சுமியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் ஆறுமுகம் அவர்களின் மைத்துனரும், அருணாவதி & சண்முகரத்தினம், காலஞ்சென்ற உதயகுமார் & குமாரி, காலஞ்சென்ற சிறீதரன், மங்களேஸ்வரி & குகதாசன், ஸ்ரீமதி & வனஞ்சரஞ்சன், சிவநேசன் & விக்னேஸ்வரி, அருள்நேசன் & கயல்விழி, அருள்மொழி & யோகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் Ajax Crematorium இல் இன்று (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00 மணிமுதல் 09.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (26.02.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்ற பின் முற்பகல் 11.00 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 24.11.1930

மறைவு 21.02.2024

தகவல்:
பாலசிங்கம் குடும்பம் (416) 438 -7755
பாலரவி பாலசிங்கம் +1 (908) 512 4474
ஜானகி சுகுமார் +1 (908) 303 1075


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**தெல்லிப்பளை - பண்டத்தரிப்பு** வீதியில்
கீரிமலைக்குத் திரும்பும் நகுலேஸ்வரர் வீதியில்
500 meter தூரத்தில் 30 பரப்பு
**தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.**
விலை பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.
(தரகர் இல்லை)
(CS/54075) J-1

தொடர்பு :- **077 782 2873**

## காணி விற்பனைக்கு

**ஊர்காவற்றுறை வடக்கு நாரந்தனையில் உறுதிக் காணி விற்பனைக்கு உண்டு.**

**075 654 9228**

# கஞ்சா பீடியுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 25
வேலணை, புளியங்கூடலில் கஞ்சா கலந்த 5 பீடிகளுடன் 53 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ,23)

## வீடு வாடகைக்கு

த.பெ.சந்தி, பிள்ளையார் வீதியில் 8 /1, தாளையடி ஒழுங்கையில் 4 அறைகள், 1 கோல், சமையலறையுடன் மேல் மாடி மட்டும் உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பத்திற்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
*தரகர் தேவையில்லை*

தொடர்பு: **077 958 7199**

**ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 - பி.ப. 6.00 மணிவரையான காலப்பகுதியில் தொடர்புகொள்ளவும்.**
(cs 54104) (N-1)

## மணமகள் தேவை

**அவுஸ்திரேலியாவில்** வசிக்கும் **பட்டதாரி** செவ்வாய் குற்றமுள்ள **மணமகனுக்கு** (N)
ஆங்கில அறிவுடைய பட்டதாரி
**மணமகள் தேவை.**
**நட்சத்திரம் - மிருகசீரிடம்,**
**லக்கினம் - இடபம்,**
**பிறந்த திகதி - 25.11.1988**
(CR/41843) J-1

**076 303 9830, 074 011 8648**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம்
**1998ல் பிறந்த பூரநட்சத்திரம்**
தனியார் நிறுவனமொன்றில் கடமைபுரியும் **மணமகனுக்கு மணமகள் தேவை**
தொடர்புகளுக்கு:-
(CS/27884) J-1

**075 045 8213**

## கூட்டம்

யாழ்., பெப். 25
நயினாதீவு சிறி நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலயக் கல்யாண மண்டபத்தில் அறங்காவலர் சபைத் தலைவர் ப.க.பரமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-66)

## விற்பனைக்கு

**புதிய டயர்கள், பேட்டரி கொண்ட புதிய ஆட்டோ விற்பனைக்கு உண்டு.**
(தரகர் தேவையில்லை)




(cs 54104) (N-1)

தொடர்பு: **தயாளன்**
**076 883 6387, 074 242 6642**

## வீடு வாடகைக்கு

யாழ். இந்து, தட்டாதெரு சந்திக்கு அருகில் அரசடி வீதியில் ஒரே வளவில் **இரு வீடுகள் வாடகைக்கு உண்டு. தனித்தோ / சேர்த்தோ** வழங்கப்படும்.
நிறுவனங்களுக்கும் ஏற்றது.
(CS/27996) J-1

தொடர்பு:- **0776087687**

**நீங்கள் கூடுதல் வருமானம் பெற விரும்புகிறீர்களா?**
**நீங்கள் உறைந்த உணவு விற்பனை சந்தைப்படுத்தும் நிறுவனத்தில் பணிபுரிகிறீர்களா?**
அப்படியானால், நீங்கள் கணிசமான வருமானத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் எங்களிடம் உள்ளன. விருப்பம் இருந்தால் அழைக்கவும் **0716860015** அல்லது உங்கள் **CV** யை **mm@frosty.lk** அனுப்பவும்.
(CS/27203) J-1

## வீடு, காணி விற்பனைக்கு

**யாழ். சுண்டுக்குழியில்** நவீன வசதிகள் கொண்ட புதிய முற்றிலும் **குளிரூட்டப்பட்ட (AC) மாடி வீடும், வடமராட்சி, நெல்லியடி** நகரப்பகுதியில் மிகவும் சிறந்த நல்ல சூழலில் **ஒன்றே முக்கால் பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.**
(CS/54097) J-1

தொடர்பு:- **070 689 2666**

## DISH ANTENNA TECHNICIANS தேவை

கொழும்பில் இயங்கி வரும் **SATTELITE** மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக் கூடிய மற்றும் **ELECTRONICS TECHNICIANS** தேவை. தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய இருவர் தேவை. உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகள் கிடைக்கும்.
உடன் தொடர்புகொள்ளவும்
(cs.54088) (N-1)

தொடர்பு: **077 771 0785**

## சென். ஜோன்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 01, 06 இற்கான மாணவர் அனுமதி - 2025

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து **01.03.2024** முதல் **28.03.2024** வரை பெற்றுக்கொள்ளலாம்
   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் **28.03.2024** வியாழக்கிழமை. அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
2. விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாள்களில் காலை **8.30** மணிமுதல் பிற்பகல் **2.00** மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
3. **தரம் 01** இற்கான விண்ணப்பப்படிவத்துடன் **பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy)** இணைக்கப்பட வேண்டும்.
4. <u>**வயதெல்லைகள்**</u>
   அ. **தரம் 01** விண்ணப்பதாரி **01.02.2019** இற்கும் **31.01.2020** இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்
   ஆ. **தரம் 06** விண்ணப்பதாரி **01.02.2014** இற்கும் **31.01.2015** இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
5. தமிழ் அல்லது இருமொழிமூல கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பங்கள் மேற் கொள்ளப்படலாம்
6. **தரம் 01 இற்குரிய நேர்முகப்பரீட்சைக்கான திகதியும் தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சைக்குரிய திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.**

### தரம் 12 (A/L 2026) இற்கான அனுமதி

- **தரம் 12** இற்கான **(A/L 2026 Batch)** விஞ்ஞானம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), கணிதம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), வர்த்தகம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), கலை (தமிழ் மொழிமூலம்), தொழினுட்பவியல் (தமிழ் மொழிமூலம் - **சென். ஜோண்ஸ் கல்லூரியில் மட்டும்**). விண்ணப்பங்கள் அந்தந்த கல்லூரிகளில் **க.பொ.த. சா /த பரீட்சை 2023 (2024)** பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றவுடன் ஏற்றுக்கொள்ளப்படும். இது தொடர்பாக அந்தந்தக் கல்லூரி அலுவலகங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**குறிப்பு :**
- தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் **தரம் 5** புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- சென். ஜோண்ஸ் கல்லூரியில் **தரம்6** இற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களில் தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

**அதிபர்கள்**
(cr.41853) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 12 . 1942



மறைவு 23 . 02 . 2024

### ஐயாத்துரை சரஸ்வதி

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் மந்துவில் மேற்கு, கொடிகாமத்தை வசிப்பிட மாகவும் கொண்ட ஐயாத்துரை சரஸ்வதி நேற்றுமுன்தினம் (23.02.2024) வெள்ளிக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயராசசிங்கம் (உப அஞ்சல் அதிபர் - மந்துவில்) மற்றும் தர்மகுலசிங்கம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), காலஞ்சென்ற இராசகுலசிங்கம் (தபால் ஊழியர்), காலஞ்சென்ற இரஞ்சிதமலர் (உப அஞ்சல் அதிபர்), இராசமலர் (ஆசிரியர் - யா / மீசாலை வீரசிங்கம் ஆ.பா), இன்பமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாஜெயந்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தனலெட்சுமி (ஆசிரியர் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.க.), யோகநாதன், பாஸ்கரன் (பிரதேச சபை - கொடிகாமம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற இராசலட்சுமி, சிவஞானசுந்தரம், பொன்னம்மா, காலஞ்சென்ற சண்முகலிங்கம், இராசகுமாரி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா, காலஞ்சென்ற மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேருந்தா - செந்தூரன், மிதுர்சன் (இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்) - வைஸ்ணா, சிவர்ஷன், கீர்த்திகா (யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) - செந்தூரன், சிவாஜன், பானுகா, தர்மிகா, சிவஜா, தண்முகி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆருஷி, ஆருஹி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்**
(CS41879) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கீரிமலை, ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலய சோபகிருது வருட மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்புற இடம்பெற்றது. (ப-66)



ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-159)



## வீதி ஓட்டப்போட்டி!

2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மட்ட இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு குமுழமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டு கனடாவில் வசித்து வருகின்ற சூ.கந்தசாமிபத்மநாதனின் நிதியனுசரணையில் அளம்பில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய மாணவ, மாணவிகளுக்கிடையிலான வீதி ஓட்டப்போட்டி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற போட்டிகளில் பாடசாலை முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் கிராமமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-19)



ஈகிள் நற்பணி மன்றத்தால் வடக்கு மாகாண ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட 200 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் திறன் விருத்தி மண்டபத்தில் மன்றத்தின் தலைவர் பா.சசிகரன் தலைமையில் இடம்பெற்றது. (ச)



தொண்டைமானாறு மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த 526 பாடசாலை மாணவர்களுக்கு மொத்தமாக 6 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால். ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. (ப-66)



யாழ். இணுவில் இந்துக் கல்லூரியில் தரம்-1 மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, கனடா அமைப்புக் குழுவின் நிதி அனுசரணையுடன் இணுவில் பொது நூலகத் தகவல் தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில் பொதுநூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-66)



சங்கத்தானை, மீனாட்சி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிமக தீர்த்தவாரி

பருத்தித்துறை வியாபாரிமூலை கடற்கரையில் நடைபெற்ற தீர்த்த வாரி நிகழ்வில் பெருமளவான பக்தர்கள் பங்கேற்றனர். மாசிமக திருவிழாவை முன்னிட்டு நேற்று சனிக்கிழமைகாலை பருத்தித்துறை வியாபாரிமூலை தெனியம்மன் ஆலயத்திலிருந்து ரத ஊர்வலமாக புறப்பட்ட உற்சவமூர்த்தி தெனியம்மன் மயிலிட்டித்துறை கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்டு தீர்த்த வாரி இடம்பெற்றது. மாசிமக பௌர்ணமி தீர்த்தவாரியைத் தொடர்ந்து பூசைவழிபாடுகள் இடம்பெற்று கடற்கரை வீதி ஊடாக சுப்பர்மடம் ஊடாக தெனியம்மன் ஆலயத்தை உற்சவமூர்த்தி வந்தடைந்தது.

(எ-100)

## வாடகைக்கு

யாழ். கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள வீடொன்று வாடகைக்குக் கொடுக்கப்படும். அல்லது தனி அறைகளாக வாடகைக்குக் கொடுக்கப்படும். சைவ போசனம் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 075 7595

(CS54116) J-1

## சர்வதேச புலவர் திருமண சேவை

பெற்றோர், பிள்ளைகளின் விருப்பங்களை அறிந்து, அதற்கு ஏற்ப 74 வருடங்களாக செயல்படும் சர்வதேச புலவர் திருமண சேவை.

இடம்: 238, அரசடி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

077 075 7595, 021 222 7147

## இலவச துரித மீட்டலும் மாதிரிப் பரீட்சைகளும்

G.C.E (O/L) 2024

இலங்கை தொழில்சார் கற்கைகள் நிறுவனமும் இலங்கை தொழில்சார் கல்வி வளர்ச்சி மன்றமும், கொழும்பின் அனுசரணையுடன், நாடளாவிய ரீதியில் க.பொ.த. (சாதாரணதர) - 2024 இல் O/L பரீட்சைகளிற்கு தோற்றும் மாணவர்களுக்கான முற்றிலும் இலவசமாக ஒழுங்கமைக்கப்பட்ட சகல பாடங்களிற்குமான துரித மீட்டலும், மாதிரிப் பரீட்சைகளும்

எதிர்வரும் 02.03.2024 இலிருந்து ஆரம்பமாகின்றன
காலம் : பங்குனி, சித்திரை 2024
நேரம் : சனி, ஞாயிறு பிரிவு I 9-12, பிரிவு II 2-5 PM

அனுமதிகளை இம்மாதம் 29.02.2024 இனுள் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 074 2349120

தலைவர் 25.02.2024 செயலாளர்

(CS 29358) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 09 . 1949



மறைவு 24 . 02 . 2024

### சின்னராசா சரஸ்வதி

புத்தூர் கிழக்கு புத்தூரைப் பிறப்பிடமாகவும் தாளையம்பதி வீதி, நுணாவில் மேற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சரஸ்வதி 24.02.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-சோதி ஆகியோரின் பாசமிகு மூத்தமகளும், காலஞ்சென்றவர்களான சின்னர்-லட்சுமி ஆகியோரின் மருமகளும், கேசவன், கேமலதா, கேபவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சிவனேஸ்வரி ஞானசுந்தரம், நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணி, சிவகுமார், நிகேதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸஜானா, யுஸானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாமினா, லதாங்கனி, தர்சிகா, ஜீவாகரன் ஆகியோரின் பெரியம்மாவும், சுபாங்கினி, திசாங்கினி, தயாங்கினி, நவநீதன், தவரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அப்புக்குட்டி அப்பையா, திருமதி ஆறுமுகம் செல்லம்மா, சின்னத்தம்பி சண்முகம் ஆகியோரின் மைத்துனியும், மீனாட்சி, சோதிலட்சுமி, பாக்கியம், இராசமணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காந்தாளம் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
076 557 5892
076 655 7198
077 699 4910

(CS 29364) V-1

## வாடகைக்கு உண்டு

யாழ் ஸ்ரான்லி வீதியில் 3 கடைகளும், வீடும் வாடகைக்கு உண்டு.

T.P: 077 723 2535

## விற்பனைக்கு உண்டு

ஓடும் உடைந்த கட்டடமும் விற்பனைக்கு உண்டு

T.P: 077 723 2535

## விற்பனைக்கு

யாழ் K.K.S வீதிக்கு அண்மையில் பிரப்பங்குளம் வீதியில் இல.43 இல் 1 1/2 பரப்பும் 2 குளியும் உள்ள வீடும், காணியும்: யாழ்.மின்சார நிலைய வீதியில் 3 பரப்பு காணியும்: யாழ்.வைத்தியசாலை வீதியில் 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணியும் விற்பனைக்கு உண்டு.

077 723 2535

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகருக்கு அண்மையில் இரு வாகனத் தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

077 153 2398

## காணி விற்பனைக்கு

யாழ். மானிப்பாய்ச் சந்தி அருகாமையில் மருதடிப் பிள்ளையார் கோயில் முன்பாக உடுவில் - மானிப்பாய் பிரதான வீதியில் 50 அடி முகப்பில் 5 பரப்புக் காணி அனைத்து வர்த்தக கட்டடப் பாவனைக்கும், அதி உயர் வடிவான வீடு கட்டவும் அருமையான காணி.

மொத்தவிலை 56 மில்லியன்
(விலை பேசித்தீர்மானிக்கலாம்)

எந்த ஒரு காரணத்திற்காகவும் வேறு தரகர்களின் தொடர்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.

SP Karan Construction and Real Estate (Pvt) Ltd

தொடர்பு:- 0773434005

(CR41874) J-1

## விற்பனைக்கு

கந்தரோடையில் 11 பரப்பு நெல் வயல் விற்பனைக்குண்டு. நல்ல சாகுபடி செய்யக்கூடிய. குளக்கட்டுக்கு அருகில் உள்ள வயல் நிலம். அருகில் குடிமனைகள். போக்குவரத்து வசதி உள்ள பாதை ஓரம் உள்ள காணி. கோடைப் பயிர்கள் (வெங்காயம், கத்தரி, வெண்டி, பூசணி, கீரை போன்ற பயிர்கள் செய்யலாம்)

தொடர்பு: காணி உரிமையாளர்

076 830 7424
077 400 2382

## MAG

**saves lives builds futures**

**Invitation to Tender (ITT) for supply of stationeries and miscellaneous footwear**

MAG is a registered charity in the UK and registered at the National Secretariat for Non-Government Organizations in Sri Lanka under the Registration Number FL 51116. MAG has been conducting humanitarian demining in Northern and Eastern parts of the country since 2002.Reclaiming land contaminated with the remnants of conflict, such as landmines, bombs, shells, and mortars. Finding ways to reduce the daily risk of death or injury for civilians, Creating safe and secure conditions for development.

MAG is seeking sealed bids from reputed Dealers / authorized agents to supply of stationeries and footwear.

Supplier bids must be submitted using the standard MAG Invitation to Tender (ITT) Forms. The format and instructions should be strictly observed as per the ITTs.

Please Note: -

- This ITTs give rise to no contractual obligation between MAG and any Tenderers.
- MAG will not be liable for any costs or expenses directly or indirectly associated with participating in this tender process.
- MAG will not be liable to any Tenderer where a Tenderer is not invited to participate in any of the subsequent processes following completion of this Tender process.
- MAG reserves the right to make associated changes with the tenders' schedule and related tender documents.

MAG`s intended timeline for this tender process is as mentioned below:

Detailed Tender package will be made available **FREE OF CHARGE** for collection from 26th February 2024 to 15th March 2024, between 09:00 AM to 04:00 PM. (Closed on public holidays & weekends) at the address given below OR send email request for the tender dossier to "**info.procurement.lk@maginternational.org**". **The final day for tender submission will be 18th March 2024 before 10 am.** Please mention the tender ref: ***"Invitation to Tender (ITT) for supply of stationery and miscellaneous footwear/AD24.LKVAV.008"*** on the top left-hand corner of sealed envelopes.

| Vavuniya | Colombo |
|---|---|
| The Tender committee<br>Mines Advisory Group (MAG)<br>Central Operating Base,<br>242, Mannar Road, Nellukulam, Vavuniya | The Tender committee<br>Mines Advisory Group (MAG<br>30A,<br>Pamankada Lane, Colombo 6 |

For further queries if any please contact our official email: **info.procurement.lk@maginternational.org**

MAG looks forward to your involvement in this innovative new project. MAG actively promotes transparent processes in all its procurement activities and readily encourages all qualified Sri Lankan companies to participate in this process.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளுக்கான ஸ்ரிக்கர்கள் ஒட்டும் நிகழ்வு தருமபுரம் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் தனியார் நிறுவனம் ஒன்றின் ஒழுங்குபடுத்தலில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. (ப-113)

# உள்ளத்தால் ஊனமுற்ற மாணவர்களே அதிகம்!

## யாழ். மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.25

தற்காலப்பெற்றோர்தங்கள்பிள்ளைகளின் கல்வியை வெறும் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே பார்க்கின்றனர். ஆனால் பல மாணவர்கள் உள்ளத்தால் ஊனமுற்றவர்களாக உள்ளனர். அதனாலேயே தவறான முடிவுகளை எடுக்கின்றனர்.

-இவ்வாறு யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிச் சென்ற பலர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். அதற்கான காரணம் என்ன? ஒரு சிறிய சவாலைக்கூட எதிர்கொள்ள முடியாத அளவுக்கு பலவீனமான மனநிலையில் உள்ளனர்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ் மக்கள் எத்தனை பெரிய சவால்களை எதிர்கொண்டனர். அன்றைய கால மாணவர்கள் இன்று பெரும் தலைவர்களாக இருக்கின்றனர். காரணம் அவர்கள் சவால்களை எதிர்கொள்வதற்கான மனப்பக்குவத்தைப் பெற்றிருந்தனர்.

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்காக ஓடித்திரியும் பெற்றோர், அந்தப் பரீட்சையால் எந்த நன்மையும் பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர். வரட்டுக் கௌரவத்தால் பிள்ளைகளைச் சிரமத்துக்குள்ளாகி அவர்களின் மூளையை ஊனமாக்குகின்றனர். அந்தக் காலத்தில் பாடசாலைகளில் இருந்த குழுச் செயற்பாட்டு மனநிலை தற்போது இல்லை. ஒரு போட்டி மனப்பான்மையே இருக்கின்றது- என்றார். (எ-66)

# மத்தியவங்கி ஊழியர் சம்பளத்தால் சர்ச்சை!

மத்தியவங்கி ஊழியர்களின் அபரிமிதமான சம்பள உயர்வு தொடர்பில் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், நாடாளுமன்ற அனுமதி யின்றி மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்புக்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக மத்திய வங்கியிடம் இருந்து உயர்மட்ட நாடாளுமன்ற குழு அறிக்கையைக் கோரியுள்ளது. கடந்த வியாழக்கிழமை மத்தியவங்கி அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, சம்பள உயர்வு தொடர்பான விடயம் பேசப்பட்டது என்று பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

சம்பள அதிகரிப்புத் தொடர்பான அறிக்கையை மத்தியவங்கி அடுத்த வாரம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பின்னர், பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் முன் மத்தியவங்கியும் அதன் நாணயச்சபையும் அழைக்கப்படும் எனவும் வலேபொட தெரிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மத்தியவங்கி ஊழியர்களின் 70 சதவீத சம்பள அதிகரிப்புத் தொடர்பாக, தமது குழு கடும் விமர்சனங்களை கொண்டுள்ளது. அத்துடன் இது ஒழுக்கக்கேடான செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)


# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
14.02.1951

அமரர் கார்த்திகேசு செல்லத்துரை
(சோபனா நகைமாடம் - உரிமையாளர்)

மறைவு
30.01.2024

கடந்த (30.01.2024) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (27.02.2024) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் (29.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும். மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



இவ் அழைப்பினைத்
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் பதாகைகள் துண்டுப் பிரசுரம் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் வீட்டிற்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர். 359/12, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS 29365) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிக்குமாறும், சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களின் தண்டனையை நீக்குமாறும், படகுகளை மீள ஒப்படைக்குமாறும் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதன் காரணமாக கச்சதீவுத் திருவிழாவையும் அவர்கள் புறக்கணித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு இந்தியா பல்வேறு மட்டங்களிலும் இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகத் தெரியவருகின்றது. இதன் ஒருபகுதியாக இலங்கைக்கான இந்தியாவின் பிரதித்தூதுவர் சத்தியாஞ்ஜல் பாண்டே இரண்டு தினங்களுக்கு முன்னர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை - இந்திய மீனவர்கள் கச்சதீவு உற்சவத்தை புறக்கணித்துள்ளமை தொடர்பில் கடற்படைத்தளபதி பிரியந்த பெரேராவிடம், கச்சதீவில் வைத்து நேற்றுக்காலை செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

“இவ்வருடம் இந்திய மீனவர்கள் கச்சதீவுக்கு வரவில்லை. இந்திய -இலங்கை மீனவர்களுக்கிடையிலான பிரச்சினை காலம் காலமாகப் நீடித்துக் கொண்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தொடரவிடாது முடித்து வைக்கவேண்டும். சட்டவிரோதமான முறையில் எல்லை தாண்டிய மீனவர்கள் கைது செய்யப்பட்டும் அவர்களை விடுவிக்கக் கோருவது நியாயமற்றது. அது சட்டரீதியாக இடம்பெற்றது. அதை நீதிமன்றம் மூலமே அணுகமுடியும். அடுத்த வருடத்துக்குள்ளாவது இந்தப் பிரச்சினைகளை நிறைவுறுத்தி, இந்திய மீனவர்கள் கச்சதீவுக்கு வருகை தரவேண்டும்” என கடற்படைத் தளபதி தெரிவித்தார். (அ-ஓ-5-125)

## எமக்கான...

எடுக்கவில்லையாயின் கட்டாயம் நடுக்கடலில் கறுப்புக்கொடிப் போராட்டத்தை காலவரையறை இன்றி தொடங்க வேண்டிவரும் என வடமராட்சி மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுச் சனிக்கிழமை வடமராட்சி வடக்கு க.தொ.கூ. சங்க சமாசங்களின் உப தலைவர் நா. வர்ணகுலசிங்கம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக மீன்பிடிக்க வருவதாக இந்திய மீனவர்கள் சொல்கிறார்கள். உங்களின் வயிற்றுப் பிழைப்பை உங்களுடைய கடலிலே பாருங்கள். எங்களுடைய கரையிலிருந்து இரண்டரை கடல் மைலுக்குள் வந்துவிட்டு எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டுபோனால் நாங்கள் எங்களது வயிற்றுப் பிழைப்புக்கு எங்கே போவது? நாங்கள் சட்டத்தரணி ஊடாக வழக்குத் தாக்கல் செய்து எங்களுக்கு இந்திய மீனவர்களால் ஏற்பட்ட இழப்புகள் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளும் வரையில் யாரையும் விடப்போவதில்லை. இனிமேல் படகுடன் பிடிபடும் எவரும் விடுதலை செய்யப்படமாட்டார்கள்.

2010ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் 75 தொடக்கம் 80 கோடி ரூபா கடற்றொழில் உபகரணங்களை நாம் இழந்துள்ளோம். இதனை நாம் இழந்திருக்கின்றோம் என்றால் எத்தனை ஆயிரம் கோடி மீன் வளத்தை நீங்கள் அள்ளி இருப்பீர்கள்.

அப்படி அள்ளிய மீன்வளத்தை வைத்தே இந்தியா எங்களது நாட்டுக்கு உதவி செய்தது. உங்களின் வரிப்பணத்தைப் பெற்று இந்தியா எங்களுக்கு உதவவில்லை - என்றார். (அ-ஓ-100)

## இரண்டு...

(வயது - 39) ஆகிய இருவருமே நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி இருவரும் கொழும்புத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் ஏற்றப்பட்ட வெற்றுக்கொள்கலனில் மறைந்திருந்து மலேசியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். கப்பல் மலேசியாவை வந்தடைந்தபோது, கொள்கலனில் மறைந்திருந்த இரு சந்தேகநபர்களையும் ஏற்க மறுத்ததால், சந்தேகநபர்களை பல நாடுகளுக்கு அழைத்துச் சென்ற கப்பலின் அதிகாரிகள் இறுதியாக சீனாவுக்குக் கொண்டு சென்றுள்ளனர். இருவரையும் சீன அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் நேற்று நாடு கடத்தப்பட்டு கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஓ-இ)

## 11 வயது...

சேர்க்கப்பட்டுள்ளான். நெல்லியடிப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

தரம் - 6 இல் புதுமுக மாணவனாக அந்தப் பாடசாலைக்குச் சென்றுள்ளான். மறுநாளே தரம் 10 இல் கல்வி கற்கும் சில மாணவர்கள் இணைந்து புதுமுக மாணவனைத் தாக்கியுள்ளனர்.

மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பில் பெற்றோரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஓ-23)

## அத்துமீறிய...

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே போராட்டம் தொடர்பான இந்த அழைப்பை மேற்படி சம்மேளனம் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பினர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுகின்றனர். மீண்டும் மீண்டும் அத்துமீறுபவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கை அரசுக்கு இந்திய மீனவர்களும் இந்திய அரசாங்கத்தினரும் அழுத்தம் வழங்குகின்றனர். எமது தொழில்களை அழிப்பவர்களை, எமது வாழ்வாதாரத்தைச் சிதைப்பவர்களை எவ்வாறு விடுதலை செய்ய முடியும்? ஆதலால், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக விரைவில் இந்திய - இலங்கைக் கடல் எல்லையில் போராட்டமொன்றை நாங்கள் நடத்தவுள்ளோம் - என்றனர். (அ-ம-27)

## சென்னை...

அந்த வீரர் யார் என்ற விவரங்கள் வெளியாகவில்லை. அடுத்த மாதம் 19ஆம் திகதி சென்னை அணியின் முகாமில் வலைப்பந்து வீச்சாளராக 17 வயதான இளைஞர் இணைந்துகொள்வார் என அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

## தட்டிக்கேட்ட...

ஊரில் இடம்பெறும் கசிப்பு விற்பனையை மேற்படி இளைஞர் தொடர்ச்சியாக எதிர்த்து தட்டிக்கேட்டு வந்துள்ளார். இந்நிலையில் நேற்றுக்காலை வீதியால் பயணித்த போது சோபிதனை, வழிமறித்த மற்றொரு இளைஞர் கத்தியால் குத்தியுள்ளார். படுகாயமடைந்த சோபிதன் மாங்குளம் ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும்போது உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஓ-19-125)

## திருப்பலி...

நேற்றுமுன்தினம் கொடியேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன.

இந்த நிலையில் நேற்றுக்காலை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்தத் திருவிழாவுக்கு இலங்கையிலிருந்து 4 ஆயிரத்து 554 பக்தர்கள் பங்கேற்றிருந்தனர். இந்தியப் பக்தர்கள் எவரும் பங்கேற்கவில்லை. நீதிபதிகள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, யாழ். மாவட்டச்செயலர் அ.சிவபாலசுந்தரன், இலங்கைக் கடற்படைத் தளபதி பிரியந்த பெரேரா, கடற்படை உயரதிகாரிகள், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூத ரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ-ஓ-125)

## மத்திய...

யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெறும் வங்கி ஊழியர்களுக்கான செயலமர்வில் கலந்து கொள்வதற்காக வடக்குக்கு வருகை தந்துள்ள அவர் நேற்றையதினம் பிராந்திய அலுவலகத்துச் சென்று பார்வையிட்டுள்ளார். (அ-ஓ-113)

**வாகனம் விலைக்குத் தேவை**
3 கியூப் ரிப்பர், மகேந்திரா மக்ஸிமோ (வடி), டாப்டா (வட்டா).
(CS 29352) J-1
தொடர்பு:- 077 457 0267

**NRS Optical Vacancy**
யாழ் நகரை அண்மித்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
வேலை நேரம்: 07.00AM - 08.00PM - After 9hours OT Will pay
Sales staff - Girls - 4
Technician - Boys - 2
Technical Assistant - Girls - 3
Interview - 26/02/2024 10.00 AM - 12.00 Noon
Place - 130, 1st Cross Street, Jaffna.
T.P: 074 281 8111

**வேலையாட்கள் தேவை**
யாழ். நகரில் இயங்கிவரும் மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
1. விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)
2. விற்பனையாளர் (Salesman)
3. கணக்கு உதவியாளர் (Account Assistant)
மேற்படி பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை.
(ஆண்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு: 0777 178 025
(CS 29355) A-1

**வேலையாட்கள் தேவை**
யாழ். நகரில் இயங்கும் மின்சாதனப் பொருட்கள் மற்றும் PVC Pipe விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றிற்கு மின்வரும் பதவிகளுக்கான வேலையாட்கள் தேவை.
1. விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)
2. விற்பனை உதவியாளர் (Sales Assistant)
(PVC Pipe தொடர்பான அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)
3. கணக்கு உதவியாளர் (Account Assistant)
தொடர்புகளுக்கு: 075 989 8136
(CS 29354) A-1


**விற்பனைக்கு**
Restaurant ஒன்றிற்குத் தேவையான தளபாடங்கள்/ உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.
★Large Upright Chillers ★Cookers
★Food Chiller ★Table
★Salad Dispenser ★Grinder
★Large Fridges ★Deep Freezers
★Bottle Cooler ★Large Gas Cylinder
★Deep Fryer ★Burger Plate with Cooker
(CS 54124) S-1
தொடர்பு எண்: 077 653 3221

**வேலையாட்கள் தேவை**
மேசன், தச்சர், வயறிங் வேலை, பெயின்ட் வேலை மற்றும், உதவியாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
071 693 3601, 077 553 3601

**வேலையாட்கள் தேவை**
மானிப்பாயில் இயங்கும் நிறுவனத்திற்கு பொதியிடுவதற்கு பெண்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
மேலதிக தொடர்புகளுக்கு:
076 640 3388

**காணி விற்பனைக்கு**
1. பெரிய விளானில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு அமைக்க, தோட்டம் செய்ய உகந்த காணி.
2. அரியாலை தென்கிழக்கில் 48 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பரப்பு 610,000/= பண்ணை அமைக்க, தொழிற்சாலை நிறுவ சிறந்த காணி. A9 - 2Km தூரம். யாழ் நகரிலிருந்து 5Km தூரம்.
(CS 27969) S-1
தொடர்பு:
077 423 5458, 077 262 7581

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணமகன் தேவை

1989 இல் பிறந்த யாழ்நகரை சேர்ந்த பட்டதாரி ஆசிரியராக பணிபுரியும் மணமகளுக்கு (மகரம். திருவோணம், கிரகபாவம் 48 1/2 இந்து (V). பொருந்தக்கூடிய படித்த மணமகனை உள்நாடு / கனடாவில் எதிர்பார்க்கிறோம்.

தொடர்பு:- 0774022097

(CS/27986) J-1

## காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோவிலில் இருந்து 200m இல் 20 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 390 2994
077 321 5353

## வேலையாட்கள் தேவை

18 வயதிற்கும், 25 வயதிற்கும் இடைப்பட்ட ஆண் வேலையாட்கள் இருவர் தேவை. கணினி அறிவும் விஞ்ஞானப் பிரிவில் படித்தவருமாக இருக்கவேண்டும். மற்றும் தொழில் பயிலுநர் ஒருவரும் தேவை.

தொடர்பு:- 077 232 3000

(CS/54120) J-1

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL , AL,
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A 077 766 8725

## வாடகைக்கு உண்டு

யாழ். நகருக்கு அண்மையாக மகளிருக்கான Beauty Parlour நடத்துவதற்கேற்றதொரு சிறிய பகுதி, தளபாடங்களுடன் ரூ.25000/= க்கு வாடகைக்கு உண்டு. Beautician NVQ 4 முடித்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

074 217 0383

(CR/41876) J-1

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், கொண்ட (V), கத்தோலிக்க சமயத்தினைச் சேர்ந்த தமது 28 வயதான மகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 479 9887, 071 234 4444

(CS/54076) J-1

## காணி விற்பனைக்கு

ராஜபாதை வீதி, கரந்தன் - இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.

075 970 1948, 077 307 5198

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், இருபாலை பிரதேசங்களில் இயங்கிவரும் புத்தக, போட்டோ கொப்பிக் கடைக்கு பெண் ஊழியர்கள் தேவை. போட்டோ கொப்பி துறையில் அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமையும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.

தொடர்பு:- 076 832 3682

(CS/54103) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ (V) குடும்பம், 1976 இல் பிறந்த B.Sc. பட்டதாரி அரச உத்தியோக திருமணமாகாத மணமகனுக்கு திருமணமாகாத படித்த நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை.

076 667 8996

(CS.54110) (N.1)

## தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ் காட்சியறைக்கு Admin Staff பெண் Executive தேவை.

தொடர்பு:- 077 815 2693

(CS/ 54053) J-1

## ICT Classes

- தரம் 6 - A/L வரையான வகுப்புக்கள் தனியாக / குழுவாக பட்டதாரி ஆசிரியரால் நேரடியாக / Zoom மூலம் கற்பிக்கப்படும்.
- O/L மாணவர்களுக்கான மீட்டல் மற்றும் கடந்தகால வினா - விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

074 264 0468

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை (பெண்). சம்பளம் 45000 ரூபா. அருகில் இருப்போர் விரும்பத்தக்கது. வயதெல்லை 25-45

தொடர்பு: 077 789 8862

## விற்பனைக்கு

முல்லைத்தீவு - கொக்குளாய் வீதியிலும், தண்ணீரூற்று நகர்ப்பகுதியிலும் வீடு, காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- +94 74 002 2113

(CS/54125) J-1

## வேலை வாய்ப்பு

நரம்பியல் புனர்வாழ்வு மையத்தில்
தாதிய உதவியாளர் (Nurse Assistant)

**தகைமைகள்**

- தாதிய முன் அனுபவம் விரும்பத்தக்கது
- தாதிய உதவியாளர் 1 வருட கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல்

சம்பளம் நேர்காணலின்போது தீர்மானிக்கப்படும்

உங்களுடைய CV ஐ imsmanipay.info@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

Green Memorial Hospital, Manipay ☎ 0212256990 0760163515

## திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில், நேர்முன்பாக உள்ள 5 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

தொடர்பு:- 076 206 1703

(CS/54100) J-1

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 986 5457

## கணக்காளர் / பொது முகாமையாளர் தேவை

( Accountant / Manager)

சுன்னாகத்தில் உள்ள சுப்பர்மார்க்கட் ஒன்றை முகாமைத்துவம் செய்ய கணக்காளர் அனுபவமும், முகாமைத்துவ அனுபவமும் உள்ள ஒருவர் (ஆண் / பெண்) தேவை.

076 067 1902, 077 451 4673

(CS/27971) J-1

## பழைய பொருள்கள் வாங்கப்படும்

பழைய கோயிற்கதவுகள், மரத்தளபாடங்கள் மற்றும் பழைய பித்தளைப் பொருள்கள் வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 729 0633
வாட்ஸ்சப்: 077 999 3737

(cs54109) (N.1)

## விற்பனைக்கு

- பலாலி வீதியிலிருந்து 700m தூரத்தில் ஊரெழுவில் 12 பரப்புக் காணியில் அமைந்த அழகிய வீடு.
- நாவலர் றோட்டையும், கச்சேரி நல்லூர் றோட்டையும் முகப்பாகக்கொண்ட 3 3/4 பரப்புக் காணி.

Contact Number
+ 94 77 221 6683
Divakar Thavavinayagan

## விற்பனைக்கு

TATA NANO (LX Model)
N.P.K.S xxxx, இலக்க கார்
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 717 3210

(CS/54030) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V) சைவ போசனம் 1977ம் ஆண்டு பரணி (3ம் பாதம்) நட்சத்திரத்தில் பிறந்த (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) மணமகனுக்கு கல்வி கற்ற குணமான மணமகள் தேவை.
தொடர்பு:- குணவதி திருமண சேவை.

077 307 6902, 070 607 6902

(CS/54116) J-1

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

10 வருட உத்தரவாதத்துடன் எங்களால் சீர்செய்து தரப்படும்

5 % விசேட விலைக்கழிவு

Finex ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடமிருந்தும் உலகத்தரமிக்க இரசாயன பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

சிறிய நீர்க்கசிவானால் இரசாயனப் பொருள்களைப் பெற்று எமது தொழினுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்துகொள்ளலாம்.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

FINEX

## பிரபல ஜோதிடர் யாழ் விஜயம்

தொழில், திருமணத்தடை, மண வாழ்க்கையில் விரக்தி, நோய், காதல் போன்ற சகல விதமான பிரச்சினைகளுக்கும் ஜோதிடர் குமாரசுவாமியைச் சந்திக்கலாம்.
முன் அனுமதி பெற்று வரவும்.

திரேசா இன்
No 72, றக்கா வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:- 077 877 8470

(CS/54086) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V). 1991ம் ஆண்டு பிறந்த திருவோணம் முதலாம் பாதம் 7ல் செவ்வாய் கிரக பாவம் 72, 3/4, சொந்தமாக வியாபார நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்கு தகுந்த உள்நாட்டு பட்டதாரி மணமகள் தேவை.
(தரகர் தேவையில்லை)

தொடர்பு:- 077 978 9484


(CS/54096) J-1

## உயர்வகை பல் வைத்திய சேவைக்கு.... For Quality, Professional Dental Care

# INTERNATIONAL DENTAL CARE

INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD.

Professional Dental Centre in Sri Lanka



**Colombo Branch**
N0. 79/9, W.A.Silva Mw,
Wellawatta, Colombo - 06,Sri Lanka.
Tel : + (94) 11 2507070,
Mob : + (94) 77 0139372, + (94) 77 0139376
W.App : + (94) 76 5224273

**Vavuniya Branch**
Raaj Medical Lab.
No:10, Bazaar Street, Vavauniya, Sri Lanka.
Tel : + (94) 24 2221577
Mob : + (94) 77 0139374
W.App : + (94) 77 059 5221

**Jaffna Branch**
N0. 84, Stanly Road,
Jaffna, Sri Lanka.
Tel : + (94) 21 2220833
Mob : + (94) 77 0031547
W.App : + (94) 77 003 1548

Web: www.internationaldentalsrilanka.com Email: internationaldentalcare@gmail.com

(cs 27937) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered

மலை : 33 | வள்ளுவர் ஆன் | மாசி 13 | ஞாயிற்றுக்கிழமை (25.02.2024) | சிகரம் : 186

ஆண்டவன் சோதனையோ -
யார்கொடுத்த போதனையோ?
தீயிலே இறங்கி விட்டான்
திரும்ப வந்து தாழ்பணிவான்
-கண்ணதாசன்





# 'கோர்ட்டுக்கு' இழுக்கப்படும் கட்சி?

**தமிழரசுக் கட்சிக்குள் நடப்பவற்றைப் பார்த்தால் அங்கே இரண்டு அணிகளுக்கும் இடையிலான மோதலைத் தீர்த்துவைக்க கட்சிக்குள் மூத்தவர்கள் யாரும் இல்லையா என்று கேட்கத் தோன்றுகிறது.**

நிலாந்தன்

**2013** ஆம் ஆண்டு மன்னாரில், முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகையின் தலைமையில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சித் தலைவர்களின் சந்திப்பு அது. ஆயர் அப்பொழுது தமிழ் சிவில் சமூக அமையத்தின் நிறுவுநர்களில் ஒருவராகவும் அதன் அழைப்பாளராகவும் இருந்தார். அச்சந்திப்பில் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் பங்குபற்றினார்கள். சந்திப்பின் முடிவில் சம்பந்தர் ஆயரைப் பார்த்து பின்வருமாறு சொன்னார்...''பிஷப் நீங்கள் சொல்லுறதச் சொல்லுங்கோ, ஆனால் கடைசியா முடிவெடுக்கிறது நாங்கள்தான்" என்று. அப்பொழுது அப்படிச் சொல்லக்கூடிய பலம் சம்பந்தருக்கு இருந்தது. ஆனால் அவர் எடுத்த முடிவுகளின் விளைவு என்ன? அப்படிச் சொன்ன சம்பந்தர் இப்பொழுது எங்கே நிற்கிறார்? அவருடைய முடிவுகளின் விளைவாக தமிழ்மக்கள் மத்தியில் தோன்றிய - மிகவும் வித்தியாசமான - ஒரு கூட்டு உடைந்து போய்விட்டது. அதுமட்டுமல்ல அவருடைய சொந்தக் கட்சியே இப்பொழுது இரண்டாகி நீதிமன்றத்தில் நிற்கிறது. அது மட்டுமல்ல, அன்றைக்கு அப்படித் திமிராகச் சொன்ன சம்பந்தரை இன்றைக்கு அவருடைய சொந்தக் கட்சிக்காரர்களே மதியாத ஒரு நிலை. ஆம். "வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி. அவள் யாரையும் மன்னிப்பதில்லை" இப்பொழுது தமிழரசுக் கட்சி உடையக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகத் தெரிகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடந்த சந்திப்பின் பின் கட்சி நீதிமன்றத்துக்குப் போகவேண்டிய வாய்ப்புகள் மேலும் அதிகரித்துள்ளனவா?

ஒரு குடும்பத்துக்குள் பிணக்கு வந்தால் அதை அந்தக்குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் தீர்த்து வைப்பதுண்டு. அல்லது அந்தக் குடும்பத்தின் நலனில் அக்கறை கொண்ட வெளியாட்கள் அதைத் தீர்த்து வைப்பதுண்டு. அதுவும் முடியாது போனால், விவகாரம் பொலிஸ் நிலையத்துக்கோ, நீதிமன்றத்துக்கோ போகும். தமிழரசுக் கட்சிக்குள் நடப்பவற்றைப் பார்த்தால் அங்கே இரண்டு அணிகளுக்கும் இடையிலான மோதலைத் தீர்த்துவைக்க கட்சிக்குள் மூத்தவர்கள் யாரும் இல்லையா என்று கேட்கத் தோன்றுகிறது. கட்சிக்குள் மூத்தவர்களாகக் காணப்படும் சம்பந்தர், மாவை, குலநாயகம், கனகசபாபதி, சிவஞானம்... போன்றவர்கள் ஏதோ ஒரு பக்கம் உலாஞ்சுவதாகத் தெரிகிறது. அதனால் அவர்கள் நடுநிலையாக நின்று விவகாரத்தைக் கையாள முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள் என்று தோன்றுகிறது. சம்பந்தரும் மாவையும் கனகசபாபதியும் அதிகம் சிறீதரனுக்கு நெருக்கமாகக் காணப்படுகிறார்கள். குலநாயகமும் சிவஞானமும் அதிகம் சுமந்திரனுக்கு நெருக்கமாகக் காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், கட்சிக்குள் வெடித்திருக்கும் பிளவைத் தீர்த்து வைப்பதற்கு கட்சியின் மூத்தவர்களால் முடியவில்லை. அதன் விளைவாகத்தான் விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்றிருக்கின்றது.

இப்பொழுதும் கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்று கட்சியின் மூத்த தலைவர்கள் முடிவெடுத்தால், விவகாரத்தைச் சுமுகமாகத் தீர்க்கமுடியும். ஆனால் அப்படிப்பட்ட மூப்போடும்; முதிர்ச்சியோடும்; பக்குவத்தோடும்; மிடுக்கோடும் கட்சிக்குள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. கொழும்பில் நிகழ்நிலைப் பாதுகாப்பு சட்டத்துக்கு எதிராக சுமந்திரன் வழக்குத் தொடுத்த அதே காலப்பகுதியில், திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்கு இணக்கமானவர்கள் என்று கருதப்படுகின்றவர்களால் இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டன. தென்னிலங்கையில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக சர்ச்சைக்குரிய ஒரு சட்டத்தை சுமந்திரன் எதிர்க்கிறார். ஆனால் அவருடைய சொந்தக் கட்சியை உடைக்கும் வேலைகளை அவர் தன்னுடைய விசுவாசிகளூடாகச் செய்கிறார் என்று அவருடைய எதிரணி அவரைக் குற்றம் சாட்டுகின்றது.

ஆனால், தான் அந்த வழக்குகளுடன் சம்பந்தப்படவில்லை என்று சுமந்திரன் மறுத்திருக்கிறார். எனினும், அவர்தான் எல்லாவற்றின் பின்னணியிலும் நிற்கிறார் என்ற அபிப்பிராயம் பரவலாகக் காணப்படுகின்றது. அவருடைய பெயர் மேலும் கெட்டுக்கொண்டே போகிறது. பிரச்சினை ஒரு சட்ட விவகாரம் ஆக்கப்பட்டதும் சிறீதரன் தன்னுடைய முகநூலில் "தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும்" என்று எழுதினார். அதன்பின் அவருக்குப் பதில் கூறுவது போல, சுமந்திரனுக்கு ஆதரவான வடமராட்சியைச் சேர்ந்த முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் அதே வசனத்தை தனது முகநூலில் எழுதினார். இதில் யார் தர்மத்தின் பக்கம் நிற்கின்றார்கள்? யார் அதர்மத்தின் பக்கம் நிற்கின்றார்கள்? எது தர்மம்?

கட்சி பல ஆண்டுகளாக யாப்பை மீறி வழி நடத்தப்பட்டிருக்கிறது என்று சிவகரன் கூறுகிறார். அவர் தமிழரசுக் கட்சியின் இளைஞரணித் தலைவராக இருந்தவர். பின்னர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர். பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக சிவில் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர். கட்சிக்குள் இரண்டு அணிகள் உருவாகியபோது அவர் சுமந்திரனின் பக்கம் நிற்கிறார் என்ற குற்றச்சாட்டு எதிரணியால் முன்வைக்கப்படுகின்றது. கட்சியின் யாப்பு நடந்து முடிந்த தேர்தலில் மட்டும் மீறப்படவில்லை. தேர்தலுக்கு முன்னரே அது மீறப்பட்டுவிட்டது. அதற்குக் கட்சியின் முக்கியஸ்தர்களாகக் காணப்பட்ட எல்லாச் சட்டத்தரணிகளும் பொறுப்பு. சிவகரனின் வார்த்தைகளில் சொன்னால், கட்சிக்குள் "வழிப்போக்கர்கள்" தலையெடுத்ததே யாப்புக்கு முரணாகத்தான்.

சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பின் யாப்பானது தமக்கு நீதியைத் தரவில்லை என்று கூறிப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் உள்ள மூத்த பெரிய கட்சியானது தனது சொந்த யாப்பையே மீறிச் செலுத்தப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் கட்சியின் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் சட்டத்தரணிகள் பலர் உண்டு. சட்டத்தரணிகளின் அரசியல் அல்லது 'அப்புக்காத்துக்களின்' அரசியல் ஒரு மூத்த பெரிய கட்சியை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

கட்சிக்குள்ளேயே விவகாரத்தைத் தீர்த்து வைக்கமுடியவில்லை என்பது கட்சி தோற்றுப் போய்விட்டதைக் காட்டுகின்றது. கட்சிக்குள் மூத்தவர்களாகக் காணப்படும் யாரும் அதைத் தீர்த்து வைக்கும் தகைமையோடும் முதிர்ச்சி யோடும் இல்லை என்பதையும் அது காட்டுகின்றது. கட்சிக்குள் மட்டுமல்ல கட்சிக்கு வெளியேயும் விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்குப் பொதுவாகயாரும் இல்லையா என்ற கேள்வி எழுகிறது.

06





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலிய குடியேற்றத்தை அகற்ற சட்டவிளக்கம் கோரும் ஐ.நா.

## சர்வதேச சட்ட நுட்பங்களை ஆராயாமல் கட்சி மோதலில் ஈடுபடும் தமிழர் தரப்பு

அ.நிக்ஸன்




இஸ்ரேல், பலஸ்தீனப் பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளதன் சட்டபூர்வத் தன்மை பற்றி ஆராய்ந்து சட்டப் பொருள் கோடல்களைப் பரிந்துரைக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை சர்வதேச நீதிமன்றத்திடம் கோரிய சட்ட விளக்கம் பற்றிய விவாதம் தற்போது நடைபெற்று வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்காவும் ரஷ்யாவும் தமது தரப்பு வாதங்களை முன்வைத்தன. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் பற்றி விளக்கம் கோரும் இந்த விவாதத்துக்குச் சுமார் நாற்பதுக்கும் அதிகமான நாடுகள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன. அமெரிக்கா உட்பட பத்து நாடுகள் மாத்திரமே இஸ்ரேலுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் கருத்திடுகின்றன.

சென்ற திங்கட்கிழமை ஆரம்பித்த இந்த விவாதம் நாளை 26 ஆம் திகதி திங்கட்கிழமைவரை நடைபெறவுள்ளது. பதினைந்து நீதிபதிகள் கொண்ட குழு இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, மக்கள் தொகை அமைப்பு, ஜெருசலேம் புனித நகரத்தின் தன்மை, பலஸ்தீன மரபுவழிப் பிரதேசங்களில் குடியேற்றம் செய்யும் இஸ்ரேலின் அடிப்படை நோக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாரபட்சமான சட்டம் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய சட்டப் பொருள் விளக்கங்களை ஆராய்கின்றனர். இது தொடர்பாக ஐ.நா.வுக்கு நீதிபதிகள் பதிலளிக்க சுமார் ஆறு மாதங்கள் எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஐ.நா.வின் சட்டவிளக்கக் கோரல் இஸ்ரேலுக்குத் தலையிடி

ஐ.நா. பொதுச்சபையின் இந்தப் பொருள்கோடல் தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்கா 'இது அரசியல் விவகாரம் என்றும் ஆகவே ஆக்கிரமிப்பு பற்றிய சட்ட விளக்கம் கோர இயலாது' என்றும் வியாக்கியானம் செய்துள்ளது. குறிப்பாகப் பேசசு மூலம் இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்துக்குத் தீர்வு காண முடியும் என்ற கருத்தை அமெரிக்கா வெளிப்படுத்தியிருக்கிறது. அத்துடன் ஐ.நா.சட்ட விளக்கம் கோருவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகுவும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். ஐ.நா.வின் கோரிக்கையின் பிரகாரம் சர்வதேச நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ள சட்ட விளக்கத்துக்கு ஒத்துழைக்கமுடியாது என்றும் அவர் அறிவித்திருக்கிறார். பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புத் தொடர்பாக விளக்கம் கோரப்பட்டால் சர்வதேச நியமங்களின் பிரகாரம் பின்வரும் மூன்று விடயங்கள் வெளிப்படும். ஒன்று, பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமை. இரண்டாவது, சட்டவிரோத ஆகிரமிப்புக்கு எதிராகச் செயற்படுதல், மூன்றாவது, திட்டமிடப்பட்டுப் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் அந்தப் பிரதேசங்களில் குடியமர்த்த அனுமதித்தல்.

ஆகவே இந்த மூன்று விடயங்களுக்குமான சட்டரீதியான பொருள் விளக்கங்களைச் சர்வதேச நீதிமன்றம் வழங்குமானால், பலஸ்தீனப் பிரதேசத்தில் 1967இல் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், அந்தப் பிரதேசங்களில் மீண்டும் குடியமர்த்தப்படவேண்டிய கட்டயாம் ஏற்படும். இது பலஸ்தீனம் தமது பிரதேசம் என்ற இஸ்ரேலின் கொள்கைக்குப் பெரும் ஆபத்தாக அமையும். அதன் காரணமாகவே இது அரசியல் விவகாரம் எனவும் பேச்சுகளின் ஊடாகவே தீர்வுகாண முடியும் என்ற கருத்தையும் அமெரிக்கா முன்வைக்கிறது என்பது வெளிப்படை.

சட்டரீதியான பொருள்கோடல் வெளிவந்தால் 1967 இல் இருந்து கைப்பற்றப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களை மீளவும் ஒப்படைக்கவேண்டிய ஆபத்து நேரலாம் என்பதாலேயே இஸ்ரேலியப் பிரதமரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்திருக்கிறார் என்பது பகிரங்கமாகிறது.

இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்துக்கு 'இரு அரசு' என்பது தான் தீர்வு என்று அமெரிக்கா கூறியுள்ளது. ஆனாலும் பேச்சு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுப்பதற்கு, சர்வதேச நீதிமன்றத் தில் ஐ.நா. சட்ட விளக்கம் கோரியமையே பிரதான காரணமாகும். பேச்சுமூலம் தீர்வு என்றால் இஸ்ரேல் 1967 இல் இருந்து கைப்பற்றிய பலஸ்தீன பகுதிகளை மீளவும் ஒப்படைக்காமல், தற்போது பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகக் குறைந்தளவிலான பிரதேசங்களுடன் மாத்திரம் தனி அரசாக அங்கீகரித்து விடலாம் என்றும் அமெரிக்கா கருதக்கூடும். ஆனாலும் அமெரிக்கா அவ்வாறு கருதுவதைக்கூட இஸ்ரேல் கடுமையாக எதிர்க்கிறது. ஏனெனில் இரு அரசு தீர்வு என்பதை ஏற்க இஸ்ரேல் மறுக்கிறது. அதாவது பலஸ்தீனத்தை தனி அரசாக அங்கீகரிக்க இஸ்ரேல் ஒருபோதும் விரும்பாது. இந்தப் பின்னணியில்தான் சர்வதேச நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் சட்டப் பொருள்கோடல் தொடர்பான விவாதம் இஸ்ரேலுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்திருக்கிறது. காஸாவில் நடப்பது இன அழிப்பு என்று கடந்த டிசெம்பர் மாதம் தென்னாபிரிக்கா சமர்ப்பித்திருந்த மனுவை விசாரணை செய்த சர்வதேச நீதிமன்றம் ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டிருந்த நிலையில், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபையில் ஐம்பத்தியிரண்டு நாடுகளுடன் இஸ்ரேலின் பலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்புப் பற்றிய சட்டப் பொருள்கோடலை கோரிய விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

### நீதிக்கான சட்டநுட்பத்தை ஆராயவில்லை தமிழர்கள்

பலஸ்தீன விவகாரம் இவ்வாறு இருக்கும் நிலையில் உலக அரசியல் நடைமுறைகளையும் சர்வதே சட்ட நுட்பங்களையும் ஆராய்வது ஈழத்தமிழர் விவகாரத்தில் சர்வதேச ரீதியாக நகர்த்தக் கூடிய அணுகுமுறைகளைக் கையாளாமல், வெறுமனே பதவிப் போட்டிகளும் கட்சியின் யாப்புச் சரியா பிழையா என்று இலங்கை ஒற்றையாட்சி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வது போன்ற தேவையற்ற விடயங்களில் தமிழ்த்தரப்புக் கவனம் செலுத்திவருகின்றமை ஆரோக்கியமானதல்ல. பலஸ்தீனப் பிரதேசங்களில் 1967ஆம் ஆண்டில் இஸ்ரேல் மேற்கொண்ட ஆக்கிரமிப்புப் பற்றிய சட்டத்தன்மைகளை ஆராய்ந்து சட்ட விளக்கம் தருமாறு சர்வதேச நீதிமன்றத்திடம் ஐ.நா. கோரியது போன்று, இலங்கை ஒற்றையாட்சி அரசும் 1941ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணம் கல்லோயாவில் சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் இன்று வரை மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்புப் பற்றிய சட்ட விளக்கங்களைக் கோரினால், நிச்சியமாக அங்கு குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை உருவாகும்.

ஆனால் ஐ.நா.பொதுச்சபையின் ஆதரவுடன் சர்வதேச நீதிமன்றத்திடம் அவ்வாறான சட்ட விளக்கம் கோரக்கூடிய அளவுக்கு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவும் இல்லை. பலமும் இல்லை. அதற்கான சூழல் உருவாக்கப்படவுமில்லை. ஏனெனில் 2009 க்குப் பின்னரான சூழலில் அமெரிக்க - இந்திய அரசுகளின் செல்லப்பிள்ளைகளாக தமிழ்த்தேசியக்கட்சிகள் மாறியிருப்பதே அந்த ஆதரவு இன்மைக்கான பிரதான காரண - காரியம். 1970 களில் இருந்து தமிழர் அரசியல் சூழலில் தமிழ்ச் சட்டத்தரணிகள் தங்களுக்குரிய சொந்த நலன்கள் மற்றும் தமிழ் இன அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையிலேயே ஈழத்தமிழ் அரசியல் விவகாரங்களையும் கையாண்டிருந்திருக்கின்றனர். ஜீ.ஜீ.பொன்னம்பலத்தில் இருந்து இன்றுவரை தமிழ்ச்சட்டத்தரணிகள் பலரின் செயற்பாடுகள் இவ்வாறானதாகவே அமைந்திருக்கின்றன.

வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் ஈழத்தமிழர்களுக்குச் சாதகமாக இருக்கக்கூடிய சர்வதேசச் சட்ட நுட்பங்களை அறிந்துகொள்ள முற்படுவதில்லை. மாறாகச் சர்வதேச நீதி கோரி ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடத்துகின்றனர். ஆனால் சர்வதேச நீதிக்கு ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் போதுமானதல்ல. சர்வதேச சட்ட நுட்பங்களை ஆராய்வதே அவசியமானது.

காஸாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்துள்ளது. மியான்மரில் றொஹிங்கிய முஸ்லிம்கள் இன அழிப்புக்கு உள்ளாகின்றனர் என்று காம்பியா என்ற ஒரு சிறிய நாடுதான் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. ஆனால் இது போன்ற அணுகுமுறைகள் எதுவும் தமிழ்த்தரப்பிடம் இல்லை. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பாகப் பேசப்படுகின்ற விடயங்களை ஐக்கிய நாடுகள் சபைக்குப் பாரப்படுத்தவேண்டிய சட்டப் பொறிமுறை தொடர்பான விளக்கங்கள் அல்லது அது பற்றி அறியக்கூடிய முறைமைகள் குறித்து ஆராயவேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. இதுவரை ஆராயப்படவுமில்லை.

இப்படியான ஒரு பின்னணியில்தான் வடக்கு - கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் செயற்படும் தமிழ்த்தேசியக் கட்சிகள் வெறுமனே தேர்தல் வியூகங்களை மாத்திரம் வகுத்துக் கொண்டிருக்கின்றன. தத்தமது கட்சிகளுக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் தமக்குரிய நாடாளுமன்றக் கதிரைகளைத் தக்க வைக்கும் உத்திகள் மற்றும் மாகாணசபை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தத்தமது கட்சிகளின் ஆசனங்களை அதிகரித்தல் என்று பேரம் பேசுதல்களுடன் ஈழத்தமிழர் அரசியல் சுருங்கிவிட்டது. ஆனால் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு சர்வதேச அரங்கில் இருந்து ஈழத்தமிழர் விவகாரத்தை முற்றாக நீக்கம்செய்து அதனை இலங்கைத்தீவின் உள்ளக விவகாரமாக மாற்றக்கூடிய அத்தனை நகர்வுகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

### ஜெனிவாவை எதிர்கொள்ள கொழும்பு தயார்

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை தொடர்பான விடயம் ஆராயப்படவுள்ளது. அதனை முறியடிக்க, தமிழர் தாயகத்தின் பகுதிகளில் இலங்கை அரசு மேற்கொண்ட நல்லிணக்கச் செயற்பாடுகள் என ஏறத்தாழ நாற்பத்தியாறு பக்கங்களில் இரண்டு அறிக்கைகள் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. கடந்த டிசெம்பர் மற்றும் கடந்த ஜனவரி மாதங்களில் இரண்டு அறிக்கைகளும் தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளன. வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான பதினைந்து உயர் அதிகாரிகள் கொண்ட குழு அடுத்தவாரம் ஜெனிவாவுக்குப் பயணம் செய்து நேரடியாகவும் விளக்கமளிக்கவுள்ளது. ஆனால் இலங்கை அரசின் இந்த இரு அறிக்கைகளும் உண்மைத் தன்மையற்றது என்று விளக்கமளித்துத் தமிழர் பகுதிகளில் இலங்கை அரசு திட்டமிட்டு மேற்கொண்டு வரும் பௌத்த மயமாக்கல் பற்றிய ஆவணங்கள் எதுவும் தமிழ்த் தரப்பினால் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக பிரித்தானியாவில் இருந்து ஜெனிவாவுக்குப் பதினாறு நாள் தொடர் பேரணி மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. நீதியைத் தேடுவதற்கான உத்வேகமும் வீச்சும் இதுவல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.வி.தவராசா

# வர்த்தகர் ராஜன் கைதும் விடுதலையும்

(1998-1999)








(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த மனு 1999 ஆம் ஆண்டு தை மாதமும், பெப்ரவரி மாதம் 02ஆம் திகதியும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. "சந்தேகநபர் கைதுசெய்யப்படும் வேளையில் கைதுசெய்யப்படுவதற்கான காரணம் அவருக்கு கூறப்படவில்லை. கைதுசெய்யப்பட்டவரின் அரச அனுமதி பெறப்பட்டு சட்டரீதியாக நடத்தப்பட்டு வந்த கப்பல் கம்பனியின் முழு விபரங்களைப் பற்றியும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியதுடன் கொழும்பிலிருந்த கப்பல் கம்பனியின் தலைமை அலுவலகத்தையும் சுற்றி வளைத்து சோதனையும் நடத்தியுள்ளனர்.

பிரபல கப்பல் கம்பனியுடன் ஒப்பந்த அடிப்படையில் முன்னர் வர்த்தகத்தை நடத்தி வந்த இந்திய வியாபாரிகள், அந்த நிறுவனத்தை விட்டுவிட்டு, வின்சேந்திரராஜனின் கப்பல் கம்பனியுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இதனால் ஆத்திரமடைந்த பிரபலமான கப்பல் கம்பனியின் தூண்டுதலின் காரணமாகப் பழிவாங்கும் நோக்கத்தோடு வழங்கப்பட்ட தவறான தகவல்களின் அடிப்படையிலும் வியாபாரப் போட்டியின் காரணமாகவுமே வின்சேந்திரராஜன் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்" எனவும் நீதிமன்றில் மனுதாரர் சார்பில் வாதிடப்பட்டது.

தமிழ்நாட்டின் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கப்பலுக்கு ஒப்பந்த அடிப்படையில் பொருள்களை ஏற்றும் 35 படகுகளில் 31 படகுகளின் உரிமையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில், வின்சேந்திரராஜனின் கப்பல் கம்பனியுடன் வர்த்தகத்தை நடத்தி வந்ததையடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

'ஏற்கனவே கைது செய்யப்பட்டு தற்பொழுது பிணையில் விடப்பட்டிருக்கும் மூன்று சந்தேகநபர்களுக்கும் இந்த வழக்கின் மனுதாரரான வர்த்தகருக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. இந்த வழக்கில் சந்தேகநபராகக் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகரை புலிகளுடன் தொடர்புபடுத்தி புலனாய்வுப் பொலிஸாரினால் முதல் அறிக்கை, மேலதிக விசாரணை அறிக்கைகள் மஜிஸ்ரேட் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அந்த அறிக்கைகளில் மனுதாரருக்கு புலிகளுடன் தொடர்பு உள்ளது என்பதற்கு எந்தச் சான்றும் முன்வைக்கப்படவில்லை. மேலும் மனுதாரரை புலனாய்வுப் பிரிவினர் நியாயமற்ற சந்தேகத்திலும் ஊகத்தின் அடிப்படையிலும் சட்டரீதியற்ற முறையிலும் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளதுடன் புலிகளுடன் மனுதாரர் தொடர்புகளைப் பேணிவருகின்றார் என்ற இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை' என நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

## புலிகளுக்கு நிதீ உதவி

பிரதிவாதிகள் சார்பாக உயர்நீதிமன்றில் ஆஜராகியிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக மன்றாடியார் நாயகம் சி.ஆர்.டி.சில்வா 'வெளிநாட்டு நாணயமாற்று மூலம் வின்சேந்திரராஜன் புலிகளுக்கு நிதி உதவியளிக்கிறார். அந்த நிதியினைக் கொண்டு புலிகள் அரசுக்கு எதிராகப் போராடுவதற்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றனர். இவை குறித்துக் கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையிலேயே புலனாய்வுப்பிரிவுப்பொலிஸாரால் வின்சேந்திரராஜன் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் விசாரணை நடத்தப்படும் இந்தக் குற்றச்சாட்டுகள் அரசினதும், பொதுமக்களினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவை. அத்துடன் அரசுக்கு எதிரான சதியுமாகும். இவை பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய பாரதூரமான குற்றச்சாட்டுகளாகும்' என நீதிமன்றில் தெரிவித்தார்.

## இந்தியப் புலனாய்வுத்துறை விசாரணை

மேலும்தனதுவாதத்தில்'இந்தியபுலனாய்வுத்துறையின் அறிக்கையின் பிரகாரம், மனுதாரருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் தொடர்பு இருப்பது குறிப்பி டப்பட்டுள்ளது. இந்தியப் புலனாய்வுத்துறை மனுதாரருக்கு புலிகளுடன் உள்ள தொடர்புகளைப் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அதனால் புலன்விசாரணை முழுமையாகாமல் மனுதாரரை பிணையில் விடுதலை செய்தால் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் நடத்தப்படும் விசாரணைக்கு பாதிப்பு ஏற்படுவது மட்டுமின்றி அரச பாதுகாப்புக்கும் பெரிய அச்சுறுத்தல் ஏற்படும்' எனத் தனது வாதத்தில் தெரிவித்து பிணை மனுவுக்கு கடும் எதிர்ப்பும் தெரிவித்தார். அரசதரப்பு வாதத்தை செவிமடுத்த நீதியரசர்கள் மனுதாரருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக இந்தியப் புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த அறிக்கையை நீதிமன்றுக்கு 1999 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டனர்.

## பிணையில் விடுதலை

1999 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி அன்று இந்த மனு மேலதிக விசாரணைக்காக உயர்நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது உயர்நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய இந்தியப் புலனாய்வு அறிக்கையை உயர்நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்காமல் 3 ஆம் பிரதிவாதியான குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரான கீர்த்தி கஜநாயக்கவின் சத்தியக்கடுதாசியொன்று உயர்நீதிமன்றுக்கு அரசதரப்பால் சமர்ப்பிக்கப்பட்டது. அரசதரப்பினால் தாக்கல் செய்யப்பட்ட மூன்றாம் பிரதிவாதியின் சத்தியக் கடுதாசியில் மனுதாரருக்கு புலிகளுடன் வர்த்தகத் தொடர்பு உண்டென்றும் மேலும் புலிகளின் முதலீட்டிலேயே மனுதாரர் வியாபாரத்தை நடத்திவருகின்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் எந்தவொரு ஆவணச்சான்றும் நீதிமன்றுக்கு அரச தரப்பால் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்திய அதிகாரிகளினால் மனுதாரருக்கும் புலிகளுக்கும் தொடர்புள்ளதா என விசாரணை நடைபெறுவதாக சத்தியக் கடுதாசியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதுகுறித்து நீதிமன்றம் தனது பார்வைக்காக இந்தியப் புலனாய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்ட போதிலும் அப்படியான ஓர்அறிக்கையை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்றுக்குச் சமர்ப்பிக்கவில்லை. குற்றச்சாட்டின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த எந்தவோர் ஆவணமோ அல்லது வேறு சான்றுகளோ அரசதரப்பால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 'மனுதாரரை சந்தேகத்தின் அடிப்படையில் மட்டும் தடுத்துவைத்து விசாரணை நடத்துவதல்ல சட்டம். நீதிமன்றம் எதிர்பார்ப்பது நியாயமான வலுவான சான்றுகளே. அவ்வாறு சான்றுகள் இருந்தால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடத்தலாம். அவ்வாறான நிலையில் பொலிஸாரின் விசாரணையில் நீதிமன்றம் தலையிடமுடியாது. அந்தச் சூழ்நிலையில் நீதிமன்றம் விசாரணைக்கு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும். ஆனால் சான்று கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் தமது சந்தேகத்தை நியாயப்படுத்தும் நோக்கத்தில் சான்றுகளை எதிர்பார்த்து மனுதாரரைத் தொடர்ந்தும் தடுத்துவைத்து விசாரணை நடத்தப்படுகின்றமை ஏற்றுக்கொள்ளமுடியாதது. இது நீதிக்குப் புறம்பான நடவடிக்கை' என்று நீதிமன்றம் தமது தீர்ப்பில் குறிப்பிட்டது.

'கைதுக்கான நியாமான காரணங்கள் காட்டப்படவேண்டும் என உயர்நீதிமன்றம் முன்னர் வழங்கிய ஊாயெயெ °நைசளை யனெ ழவாநசள ஏள யுவவழசநெல புநநெசயட 1ளுடுசு யவியபந 51 தீர்ப்புக்கு அமைய இந்த வழக்கினை ஆராயும் போது எந்தவித ஆதாரமுமின்றி மூன்றாம் பிரதிவாதியான குற்றப்புலனாய்வு அத்தியட்சகரின் வெறும் ஊகம் அல்லது சந்தேகத்தின் காரணமாகவே மனுதாரர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றமுடிவுக்கு வரவேண்டியுள்ளது. பொலிஸார் தமது சந்தேகத்துக்கு ஏதாவது சான்றுகள் கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்றுள்ளனர். எனவே மனுதாரரைத் தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கு ஆதாரமற்ற இந்தச் சந்தேகம் மட்டும் போதுமானதல்ல. குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மனுதாரருக்கு புலிகளுடன் தொடர்பு உண்டு என்ற தமது சந்தேகத்தை உறுதிப்படுத்த இன்றுவரையில் எந்தச் சான்றுகளையோ ஆதாரங்களையோ நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கவில்லை. இதன் அடிப்படையில் மனுதாரரை தொடர்ந்து தடுத்து வைப்பது நியாயமற்றது . எனவே தடுப்புக்காவல் உத்தரவை நீடிக்கமுடியாது' என்று கூறி பிரதம நீதியரசர் பு..ளு.னுந. சில்வா, நீதியரசர்களான பிரியந்த பெரேரா, ஷிராணி பண்டாரநாயக்க ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டிருந்த மனுதாரரை நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்தனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் பு..ளு.னுந.சில்வா நீதிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். நீதியரசர் பிரியந்த பெரேரா ஓய்வு பெற்ற பின்னர் தற்பொழுது மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின்னர் காலமாகிவிட்டார். இந்த வழக்கில் நீதியரசர்கள் குழாமில் அங்கம் வகித்த ஷிராணி பண்டாரநாயக்க, பின்னர் பிரதம நீதியரசராகக் கடமையாற்றினார் இந்த வழக்கில் அரச தரப்பில் ஆஜராகிய பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் சி. ஆர். டி. சில்வா சட்டமா அதிபராக பதவி உயர்வுபெற்று ஓய்வு பெற்ற பின்னர் காலமாகி விட்டார்.

## தடுப்புக் காவல் கைதிக்கு பிணை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் வழங்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட கைதிக்கு உயர்நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்த முதலாவது வழக்கென்பது குறிப்பிடத்தக்கது. இதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில் உயர்நீதிமன்றினால் 1999ஆம் ஆண்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட வின்சேந்திரராஜாவிற்கு எதிராக இன்று வரை (2022) எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டு வழக்கொன்றும் தாக்கல் செய்யப்படவில்லை. என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். என்பதுடன் சதாசிவம் வின்சேந்திரராஜன் கெபிடல் தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளராவார்.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவாளி + செ.ரவிசாந்த்



# காதலர் நாளில் காவு வாங்கிய

**பெப்ரவரி 14. காதலர் தினம்.**

ஆனந்தத்தின் உச்சம் முழுதும் அந்த வாகனத்துக்குள் நிறைந்திருந்தது. அதை அனுபவித்தவாறே வாகனத்தை அவன் செலுத்திக் கொண்டிருந்தான். பின் 'சீற்றில்' அவன் காதலித்துக் கரம்பிடித்தவளும், அவள் கருவில் உருவாகி கைகளில் தவழும் மூன்றுமாதக் குழந்தையும். தங்கள் மழலையின் மொழியிலே, தங்கள் காதல் வாழ்வை அசைபோட்டபடி அவர்கள் சென்றுகொண்டிருந்தார்கள்.

எப்போதும் செய்யும் தொழிலைத் தெய்வமாக நினைப்பவன் அன்றைய நாளை, தன்னவளுக்காகவும், குழந்தைக்காகவும் ஒதுக்கியிருந்தான். காலையில் தம்பதியராக தங்கள் மூன்றுமாதக் குழந்தையோடு நல்லூர் முருகனை வழிபட்டு வந்திருந்தார்கள். மாலையில் காதலர் தினத்தை கேக் வெட்டிக் கொண்டாடுவதாக ஏற்பாடு. கேக் எடுக்கப்போகும் வழியில் அப்படியே தங்களோடு, மனைவியின் சகோதரியையும் ஏற்றிக்கொண்டு ரியூசனில் விட்டுவிட்டு வாகனத்தை சீராகச் செலுத்திக் கொண்டிருந்தான் அவன்.

இன்னும் சற்றுத்தூரம் தான். கேக் கைக்கு வந்துவிடும். பாதைக்குக் குறுக்கே படுத்திருந்தது தண்டவாளம். பாதுகாப்புக் கடவையற்ற அந்தப் பகுதியில் ரயில் வருவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. காதலர் தினக் கொண்டாட்ட எதிர்பார்ப்போடு மனைவியைக் கண்ணாடி வழியே பார்த்து முறுவலிக்க -
பதிலுக்கு அவளும் கண்களில் காதலோடு அவனை ரசிக்க -
அவர்களின் காதல் சின்னமாக கைகளில் தவழ்ந்த குழந்தை தன் மழலை மொழியில் பின்னணி இசைபோல மிழற்றிக்கொண்டிருக்க-
எதிரே தெரிந்த தண்டவாளம் போகும் பாதையைக் கடக்க அவன் வாகனத்தைச் சற்று வேகம் குறைத்து செலுத்த-
'கிர்க்க்க்க்'!
என்று ஒரு விக்கலோடு அந்த வாகனம் சடுதியாக தண்டவாளத்தின் நடுவே தன் இயக்கத்தை நிறுத்திக்கொண்டது.
அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.
'பிள்ளையோட கெதியா இறங்கும்'
மனைவிக்குச் சொல்லிக்கொண்டே தானும் இறங்க கதவைத்திறக்க முற்பட்டான்.
அதற்குள்-
'டமால்'!!
எவ்வித எச்சரிக்கை ஒலியுமில்லாது இரும்புப்பாம்பு போல விரைந்துவந்த ரயில், அந்த வாகனத்தை தூக்கிப் பந்தாடி, கணநேரத்தில் கசக்கி எறிந்து விட்டுப்போனது. ஒரு காதல்கூடு சிதைந்து சின்னாபின்னமானது.
குருதி கொப்பளிக்க, காயங்களின் பெருவலியால் துடித்தபோதும், அவன் இறுதி மூச்சை இறுகப் பிடித்திருந்தான். தன் பிள்ளையையும் மனைவியையும் அவன் கண்கள் தேடின. அதற்குள் சம்பவத்தைப் பார்த்தவர்கள் கூடி விட்டனர்.
மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே, - காதலர் தின கேக்கை வெட்டாமலேயே - அவன் உயிர் பிரிந்திருந்தது.
மனைவி கடும் காயங்களோடு மீட்கப்பட்டபோதும், உயிர் பிழைத்திருந்தாலும், திக்பிரமை பிடித்துப் போனவளாக , கண்முன்னே ஒரு செக்கனில் தன் வாழ்வு தொலைந்து போனதை ஏற்கமுடியாதவளாக மாறியிருந்தாள்.
அவர்களுக்கு காதல் பரிசாக கடவுள் கொடுத்திருந்த குழந்தையையும் பாழாய்ப்போன ரயில் கொன்றிருந்தது.

**கனவுகளுக்கு உயிர் கொடுத்தவன்**

ஆனந்தராசா சயந்தன். 32 வயதிலேயே பேர் சொல்லும் ஒரு இளம் தொழிலதிபராக மிளிர்ந்தவன். அவனுக்குள் சிறுவயதில் இருந்தே நிறையக் கனவுகள் இருந்தன. கடின உழைப்பே அந்தக் கனவுகளை நனவாக்கும் என்ற உண்மையைச் சிறுவயதிலேயே சரிவரப் புரிந்துகொண்டவன். இணுவில் ஆஸ்பத்திரியடியைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தாலும், போர் வாழ்வு அவனை வவுனியாவிலேயே ஆரம்பக் கல்வியைப் பெற வைத்தது. ஊருக்கு மீண்டு வந்து இடைநிலைக்கல்வியை இணுவில் மத்திய கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்தான். அவனுக்கு கல்வியை விடவும் உழைக்கவேண்டும், சொந்தக்காலில் நிற்கவேண்டும் என்ற நினைப்பே அதிகமாக இருந்தது.
தந்தையின் பலகைக்கடையில் அவருக்கு உதவியாக எப்போதும் நிற்பான். அப்படி உதவிக்கு நிற்கும்போதே தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டதோடு, இதை ஆரம்பப்புள்ளியாக வைத்து எப்படி வாழ்வின் அடுத்தகட்டத்துக்குச் செல்வது என்றும் திட்டமிடத்தொடங்கினான். 16 வயதிலேயே சொந்தமாக லொறி எடுக்குமளவுக்கு . மிக இளம் வயதிலேயே அவனுக்குள் முன்னேறவேண்டுமென்ற லட்சியம் ஒரு நெருப்பாக எரிந்துகொண்டிருந்தது. படிப்படியாக பலகைக் கடையில் இருந்து கட்டடப்பொருள்கள் விற்பனையகத்தை ஆரம்பித்தான். தந்தையின் பெயர் கொண்டதாக அவன் தந்தையோடு சேர்ந்து ஆரம்பித்த 'ஆனந்தா ஹாட்வெயார்' குறுகிய காலத்துக்குள்ளேயே எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று, சயந்தன் கண்ட கனவுகள் எல்லாமே நனவாகத் தொடங்கின. டிப்பர்கள், ஹை-ஏஸ் என்று வாகனங்களும், தேவையான பணமும் சயந்தனுக்கு வந்துசேர்ந்தன. இது போதாதென்று காதலித்தவளை 2021 இல் ஊரறிய இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் முன்னிலையில் கைத்தலம் பற்றினான். இரு வருடங்கள் அவர்களின் இல்லற மகிழ்வின் விளைவாக ஒரு அழகிய பெண் குழந்தை வீட்டுக்குள் காலடி வைத்தாள். செல்வம், இன்பம், மனைவி, மகவு என்று எந்தக் குறையுமில்லாதது அவன் வாழ்வு. கணநேரத்தில் சொல்லாமல் கொள்ளாமல் பாய்ந்தடித்து வந்த ரயில் மட்டும் அன்றைக்கு அந்த வஞ்சத்தை செய்திராவிட்டால், எதிர்காலத்தில் வடக்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய தொழிலதிபராக அவன் உயர்ந்திருப்பான். ஆனால் கடவுள் கருணையைத் தொலைத்திருந்தார். எல்லாம் கொடுத்து அவனை அழகு பார்த்து விட்டு, மின்னலைப் போல அவன் வாழ்வையும், வாழ்வின் பேறென அவன் எண்ணிய குழந்தையையும் பறித்தெடுத்துவிட்டார்.

## "இப்பிடி ஒரு அக்சிடெண்டை கண்டதேயில்லை"

**எஸ்.சற்குருதாஸ்**
*(வர்த்தக நிலைய உரிமையாளர் - இணுவில் கிழக்கு, விபத்தை நேரில் கண்டவர்)*

உந்த ரயில் கடவைக்கு பக்கத்தில தான் என்ர கடை. சயந்தன் எனக்கு முதலே நல்ல பழக்கம்.
அண்டையான் அக்சிடெண்டை இப்ப நினைச்சாலும் என்னவோ செய்யிறமாதிரி இருக்குது. அண்டைக்கு வழக்கம் போல கடையில இருக்கேக்க, சயந்தன் தன்ர மனுசி , பிள்ளையோட ஹைஏஸில போறதைக் கண்டனான். கடவையடிக்குப் போனவுடன, வாகனம் திடீரெண்டு 'ஸ்ட்ரைக்' ஆகி நிண்டிட்டுது. அதை கனதரம் சயந்தன் ஸ்ராார்ட் பண்ணியும், ஸ்ராார்ட் வரேலை. ஏன் வாகனம் நிண்டதெண்டு நானும் கடையில் நிண்ட இன்னொருத்தரும் பாக்கப் போவமெண்டு வெளிக்கிட கண்ணுக்கு முன்னால ரெயின் வந்து வாகனத்தை அடிச்சு, எல்லாத்தையும் முடிச்சுப் போட்டுது. ரெயின் அடிக்கேக்க சரியாகப் பின்னேரம் 06.25 மணி.
வாகனத்தின்ர பின் சீற்றில இருந்த தன்ர மனிசியையும், குழந்தையையும் சயந்தன் கீழே இறக்கி விட்டுத் தானும் கீழ இறங்க வெளிக்கிடேக்கதான் ரெயின் அடிச்சது. இதை நானும் என்னோட நிண்டவரும் நேர கண்டனாங்கள். இப்பிடி ஒரு அக்சிடெண்டை கண்டதேயில்லை. ரெயின் அடிச்ச அடியில சயந்தன் கிட்டத்தட்ட 40 மீற்றருக்கு அங்கால போய் விழுந்திட்டான். மனுசி, பிள்ளையளுக்கும் கடும் அடி. ஆனால் அவை அவ்வளவு தூரத்துக்குப் போய் விழேலை. ரெயின் அடிச்ச அடியில குழந்தை பேச்சு மூச்சு இல்லாமல் போட்டுது. சின்னப்பிள்ளைதானே, உந்த அடியை என்னெண்டு தாங்கும். பெரியாக்களே தாங்கமாட்டினம். குழந்தை அந்த இடத்திலேயே செத்திட்டுது. வாகனமும் சுக்குநூறாகப் போட்டுது. சயந்தனை ஆஸ்பத்திரிக்கு ஏத்தேக்க உயிர் இருந்தது. ஆஸ்பத்திரியில சேர்த்த பிறகு சயந்தன் செத்திட்டான் எண்டு தெரிய வந்தது. சயந்தன்ர மனுசியும் பாவம். அது சின்னப்பிள்ளை. இந்த வயசில இப்பிடியொரு இழப்பு. அந்தப் பிள்ளைக்கும் ரெயின் அடிச்சு சரியான காயம். அவாக்கு குழந்தையும்,சயந்தனும் செத்தது முதல்ல தெரியாது. ஆஸ்பத்திரிக்கு ஏத்திக்கொண்டு போன ஆக்களிட்ட "பிள்ளை எங்கே? அவர் எங்கே?" எனக் கேட்டு இருக்கிறா. எல்லாம் விதி.

## விபத்துகள் தொடர்கதை: அச்சத்தில் மக்கள்!

**ந.தவசோதிநாதன்**
*(இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளரும், ஆசிரியரும் )*

தினம்தோறும் ஏராளமான மக்கள் பயணிக்கும் வீதியில் இணுவில் கிழக்கில் அமைந்துள்ள இந்த ரயில் கடவை ஆபத்து நிறைந்த புகையிரதக் கடவையாக உள்ளது. குறித்த கடவையிலிருந்து தெற்குப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தால் குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் வளைவு இருக்கிறது. ரயில் இந்த வளைவைக் கடந்த பின்னர் தான் எங்களுக்குத் தெரியும். வளைவைக் கடந்து ரயில் வேகமாக வரும் போது, பாதுகாப்பற்ற ரயில் கடவையில் எந்த வாகனத்தில் யார் கடக்க முற்பட்டாலும் அவரால் நிச்சயம் சமாளிக்க முடியாது. ஏனெனில், அந்த வளைவைக் கடந்த குறுகிய நேரத்தில் –நான்கு அல்லது ஐந்து செக்கனுக்குள் – ரயில் கடவையடிக்கு வந்து விடும். குறித்த ரயில் கடவை தொடர்பில் உரிய மாற்று ஒழுங்குகளைச் செய்யுமாறு வலிகாமம் தெற்குப் பிரதேசசபைக்கும், சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கும், இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பில் மகஜரை ஏற்கனவே வழங்கியிருந்தோம். அதுமாத்திரமன்றி ஏனைய பொது அமைப்புகளும் இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனை மேற்கொண்டு யாருடைய கவனத்துக்கு

கொண்டு செல்வதென
இந்த விபத்துக்கு முக்
வலியை, வேதனை
(பெப்ரவரி 15 ஆம் திகதி
டத்தில் ஈடுபட்டனர். இ
அநியாயமாகப் பறிபோ
றோம். பாதுகாப்பற்ற ர
வதற்குத் தேவையான
தயாராகவே உள்ளனர்.
குறித்த ரயில் கடவையி
மக்கள் மிகுந்த துயரத்
வாழ்ந்து கொண்டிருக்கி
காலம் தாழ்த்தாது வி
தான் கிராம மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரயில்

# உயிர்குடிக்கும் ரயில்கடவையால் தொடரும் அச்சம்

## யமன் உலாவும் இடம்

இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன் கோயிலுக்கு அண்மையில் , உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதியிலே அமைந்துள்ள இந்த ரயில் கடவை அதன் அமைவிடம் காரணமாக எப்போதுமே ஆபத்தை தனக்குள் ஒளித்து வைத்திருக்கிறது. யமன் அடிக்கடி வந்து போகும் இடமென்றும் சொல்லலாம்.


பல வருடங்களுக்கு முன்னர் - கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு முன்னர் - மாட்டுவண்டியில் சென்ற மகாலிங்கம் என்பவர் பாதுகாப்பற்ற இந்த ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோது, ரயிலில் மோதுண்டு உயிரிழந்திருந்தார். யுத்தம் ஓய்ந்து மீண்டும் வடக்கில் ரயில் ஓட ஆரம்பித்த பின்னர் மூன்று கடவைக் காப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். கொரோனாவுக்குப் பின்னர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக கடவைக் காப்பாளர்கள் பணியில் ஒழுங்காக ஈடுபடவில்லை. இதற்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாததே காரணம்.

இந்த ரயில் கடவையைக் கடந்து தினமும் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், விவசாயிகள், முதியவர்கள், நோயாளர்கள் எனக் குறைந்தது ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயணிக்கிறார்கள். இந்தக் கடவை பாதுகாப்பற்றதாக இருப்பதால், எல்லோரும் தமது உயிர்களைக் கைகளில் பிடித்துக் கொண்டு மிகவும் அச்சமான நிலையிலேயே தொடர்ந்தும் பயணிக்கிறார்கள். பல தடவைகள் சிறுவர்கள், முதியவர்கள் உள்ளிட்டவர்கள் ரயில் விபத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியிருக்கிறார்கள்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்த ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போது அவரின் மோட்டார் சைக்கிளின் பின்பக்கமாக ரயில் மோதியுள்ளது. எனினும், இளைஞன் சுதாகரித்து மோட்டார் சைக்கிளை விட்டுப் பாய்ந்தமையால் காலில் காயங்களோடு தப்பியிருந்தார். குறித்த இளைஞர் தற்போது வெளிநாட்டிலிருக்கிறார். இந்தச் சம்பவம் நடந்து ஆறு மாதங்களின் பின்னர் கடவையைக் கடக்க முற்பட்ட வெளியூரைச் சேர்ந்த ஒருவரும் ரயில் விபத்திலிருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பியிருந்தார்.

## அமைச்சர் சொன்னது என்னாச்சு?

விபத்து நடந்து சில தினங்களின் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ரயில் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக வருகை தந்து கடவையைப் பார்வையிட்டதுடன் உரிய பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்து தருவதாகவும் கூறிச் சென்றார்கள். குறிப்பாக இந்தக் கடவையில் சமிக்ஞை விளக்கொன்றை உடனடியாகப் பொருத்துவதாகவும், கிராம இளைஞர்கள் இருவரை இந்தக் கடவைக்குக் காவலர்களாக வேதன அடிப்படையில் பணிபுரிய நியமிப்பதாகவும், அந்த வேதனத்தைத் தனது கட்சி நிதியில் இருந்து வழங்குவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால் இதுவரை அவை எதுவுமே நடக்கவில்லை. இன்னும் இந்தக் கடவை ஆபத்தான, உயிர் குடிக்கும் கடவையாகத்தான் இருக்கின்றது.



ல்வதென எங்களுக்குத் தெரியவில்லை. அதிகாரிகளின் அலட்சியமும்
ுக்கு முக்கியமான காரணம். ஓர் இளம் குடும்பம் சிதைக்கப்பட்ட
தனையைத் தாங்கமுடியாமல் தான், விபத்து நடந்த அடுத்தநாள்
ஆம் திகதி) எமது கிராம இளைஞர்களும், மக்களும் மறியல் போராட்
டனர். இனியும் இந்தப் பாதுகாப்பற்ற கடவையால் ஓர் உயிர் கூட
ப் பறிபோகக்கூடாது என்பதில் எல்லோரும் தெளிவாக இருக்கின்
ாப்பற்ற ரயில் கடவையில் உரிய பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்
வையான நிதி ஒத்துழைப்புகளை வழங்குவதற்கும் எமது மக்கள்
உள்ளனர்.
கடவையில் இரண்டு உயிர்கள் பறிபோன நாளிலிருந்து எமது கிராம
த துயரத்திலும், மன உளைச்சலிலும், அச்சமானதொரு சூழலிலும்
ண்டிருக்கின்றனர். இத்தகைய நிலை தொடர இடமளிக்கப்படாமல்
தாது விரைந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பது
மக்களின் எதிர்பார்ப்பு .

## தடயத்தை தேடி...

## ரயிலின் காந்தசக்தி தான் விபத்துக்கு காரணமா?

ரயில் தண்டவாளங்களைக் கடக்க முற்படும் வாகனங்கள், இயங்க மறுத்து அப்படியே நின்றுவிடுவதே அவை விபத்தில் சிக்குவதற்கு பெருமளவுக்கு காரணம். இப்படி வாகனங்கள் தண்டவாளத்தில் ஏறிக் கடக்கும்போது, ரயில் வரும்போது தண்டவாளத்தில் உருவாகும் காந்தப்புலமே இப்படி வாகனங்களின் இயங்குநிலையை இல்லாமல் செய்துவிடுகின்றது என்று பலரும் சொல்கிறார்கள். இணுவிலில் நடந்த இந்த விபத்துக்கும் அப்படித்தான் ஒரு காரணம் சொல்லப்படுகின்றது.

ஆனால் அது உண்மையல்ல. ஒருபோதும் ரயிலால் தண்டவாளத்தில் எவ்வித காந்தப்புலமும் உருவாவதில்லை. அப்படி ரயிலால் காந்தப்புலத்தை உருவாக்க முடிந்தால், தண்டவாளத்தைக் கடக்கும் வாகனங்கள் மட்டுமல்லாது ரயிலுக்குச் சமாந்தரமாக மிக அருகாக வீதியில் பயணிக்கும் வாகனங்களும் ஓடாமல் நின்றுவிடுமே. அப்படியானால் எப்படி இந்த வாகனங்களுக்கு தண்டவாளத்தைக் கண்டதும் ஓடமுடியாமல் திடீர் காய்ச்சல் வந்துவிடுகிறது? காரணம்,மிக இலகு. வழக்கமாக, ஒரு ஓட்டுநர் ரயில் பாதையின் குறுக்கே வாகனத்தை மிக மெதுவாகவே ஓட்டுவார். இலங்கையில் உள்ள பல ரயில் கடவைகள், வீதியில் இருந்து சற்று உயரமாக உள்ளன. எனவே ரயில் பாதையைக் கடப்பது சிறிய மலையில் ஏறி இறங்குவது போன்றது. வாகனங்களை ஓட்டுபவர்கள் தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் வாகனத்தை மிக மெதுவாக மலையில் ஓட்டுவது எவ்வளவு கடினம் என்பதை அறிந்திருப்பார்கள். இது எளிதான காரியம் அல்ல. சிறிய தவறு ஏற்பட்டால்கூட, வாகனத்தின் இயந்திரம் நின்றுவிடும். எனவே, அந்தக் காரணத்தினாலோ அல்லது வேறு ஏதேனும் சீரற்ற காரணங்களினாலோதான், வாகனத்தின் இயந்திரம் ரயில் பாதையில் திடீரென இயங்கமறுத்துவிடுகின்றது. ஆனால் பிறகு ஏன் அதை உடனடியாக மீண்டும் 'ஸ்ராா்ட்' செய்ய முடியாது?



இது பயத்தால் நிகழ்கிறது. வேறு எதுவும் இல்லை. இயந்திரம் நிறுத்தப்பட்ட ஒரு வாகனத்துக்குள் நீங்கள் சிக்கிக்கொண்டிருக்கும்போது, ஒரு ரயில் தம்மை நோக்கி வருவதைப் பார்த்தால் உண்டான பதற்றத்தால் வழக்கத்துக்கு மாறான அவசரத்தோடு வாகனத்தை ஸ்ராா்ட் செய்ய முனைவதால், அது இயங்க மறுக்கிறது. [illegible] ஸ்ராா்ட் செய்தால், இந்தப் பிரச்சினைக்கு சந்தர்ப்பம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர்களே!


நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




## சிறுவர் கைவண்ணம்

சி.பிரவின்
தரம் - 11
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.




J.போனிபன்
தரம் - 11
யா/ நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலயம்.




வ.பிருந்தன்
தரம் - 2
யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்.





சு.அபிசேக்
தரம் - 6
இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை.



மதுசாஜினி சுதாகரன்
தரம்-10
வவு/விபுலானந்தா கல்லூரி

## ‘கோர்ட்டுக்கு’ இழுக்கப்படும் கட்சி?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பு கட்சிகளுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முனைந்த சிவில் சமூகங்கள் இப்பொழுது கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்தும் ஒரு விடயத்தில் தலையிடுவதாகத் தெரியவில்லை. வழமையாக கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஈடுபடும் சிவகரன் இப்பொழுது சுமந்திரனுக்குச் சார்பானவராகப் பார்க்கப்படுகிறார்.ஆங்கிலம் பேசும் உலக சமூகத்துடன் அதிகம் இடையூடாடும் தமிழ் சிவில் சமூக அமையம் – இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்படும் அமைப்பு – அதுவும் தலையிடும் நிலைமைகளைக் காணவில்லை.அந்த அமைப்பின் நிறுவுநர்களில் ஒருவரான குருபரன் தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஒரு வழக்கில் தோன்றுகிறார்.இவ்வாறு சிவில் சமூகங்கள் இரு தரப்பையும் ஒரு மேசைக்கு அழைத்துக் கொண்டுவரும் சக்தியற்றிருக்கும் ஒரு சூழலில்,மதத் தலைவர்களும் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.பொதுவாக சிவில் சமூகங்கள் முன்கையெடுக்கும் போதுதான் மதத் தலைவர்களும் அவற்றோடு இணைந்து செயற்படுவதுண்டு. இம்முறை சிவில் சமூகங்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சிகளுக்கு இடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் விடயத்தில் சிவில் சமூகங்கள் தலையீடு செய்திருக்கின்றன.ஆனால் ஒரு கட்சிக்குள் பிணக்குகள் ஏற்படும்போது அதைத் தீர்ப்பதற்கு சிவில் சமூகங்கள் தலையிட்டது குறைவு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் மணிவண்ணன் அணி உடைந்து வெளியே வந்த பொழுது, சில தனிநபர்கள்தான் தலையிட்டார்கள்.எனினும் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. இப்பொழுது தமிழரசுக் கட்சிக்குள்ளும் உடைவு வந்திருக்கிறது. அதைத் தீர்ப்பதற்குச் சிவில் சமூகங்கள் தலையிடாத ஒரு நிலை காணப்படுகிறது.

அதாவது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மூத்த கட்சிகளில் ஒன்றாகவும் உள்ளவற்றில் பெரியதாகவும் காணப்படும் ஒரு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிணக்கைத் தீர்த்துவைக்க கட்சிக்குள் மூப்பாக உள்ளவர்களாலும் முடியவில்லை;கட்சிக்கு வெளியேயும் யாரும் இல்லையா?இது தமிழரசுக் கட்சியின் சீரழிவை மட்டும் காட்டவில்லை. தமிழ் அரசியலின் சீரழிவையும் காட்டுகின்றது. ஒரு பொதுவான,பலமான மக்கள் இயக்கம்;ஒரு தேசிய இயக்கம் இல்லாத பாரதூரமான வெற்றிடத்தை அது காட்டுகின்றது.

அரங்கில் உள்ள புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள்,குடிமக்கள் சமூகங்கள், மதத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற யாருமே இந்த விடயத்தில் தலையிடாத ஒரு நிலை.பெரும்பாலானவர்கள் இது தங்களுக்குச் சம்பந்தமில்லாத ஒரு விடயம் என்று கருதிக்கொண்டு பார்வையாளர்களாகக் காணப்படுகிறார்கள்.சிலர் அரசியற் கூர்ப்பின் வழியில்,சிதைய வேண்டியது சிதையட்டும் என்று கூறுகிறார்கள்.இது தமிழ் மக்கள் ஓர் அரசியல் சமூகமாகப் பலமாக இல்லை என்பதைக் காட்டுகின்றது. இது தமிழரசுக் கட்சிக்கு வந்த சோதனை மட்டுமல்ல, தமிழ் அரசியல் சமூகம் முழுவதற்கும் வந்த ஒரு சோதனை.

அவ்வாறு கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்கு நீதியான,மூப்பான ஆட்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்றிருக்கிறது. இந்த நிலை தொடருமாக இருந்தால்,கட்சியின் எதிர்காலத்தை நீதிமன்றம்தான் தீர்மானிக்கும். நீதிமன்றத்தில் இப்பொழுது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகளுக்கான தீர்ப்புகளின் அடிப்படையில் அது தீர்மானிக்கப்படும்.

தமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை,போர்க்குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றுக்கு எதிராக நீதி கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் காணப்படும், உள்ளதில் பெரிய ஒரு கட்சி தனக்குள் நீதி கேட்டு நீதிமன்றத்தை நாடியிருக்கிறது.எந்த உள்நாட்டு நீதியை ஏற்றுக்கொள்ள மறுத்து சர்வதேச நீதியைக் கேட்கின்றதோ,அதே உள்நாட்டு நீதியின் முன் போய் நிற்கின்றது.இது,தமிழ் மக்கள் தொடர்ந்து தோற்றுக் கொண்டிருப்பதைத்தான் காட்டுகின்றதா?அல்லது ‘அப்புக்காத்துமாரி’ன் அரசியல் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தோற்கடித்துக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றதா?




# கச்சதீவு

யாழ்ப்பாண தீபகற்பத்துக்கு அருகிலுள்ள ஒரு தீவாகும். இது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ளது.

நெடுந்தீவில் இருந்து 20கிலோ மீற்றர் தொலைவிலும் இந்தியாவின் இராமநாதபுரத்தில் இருந்து 10 கிலோமீற்றர் தொலைவிலும் கச்சதீவு அமைந்துள்ளது.

இந்தத் தீவின் பரப்பளவு 285 ஏக்கர் 1.15 சதுர கிலோ மீற்றராகும்.

அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்திக்கும் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவுக்கும் இடையில் 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவு இலங்கையின் வசமாகியது.

மனிதர்களின் சுவடுகளே இல்லாத கச்சதீவு, புவியியல் மற்றும் பொருளாதார ரீதியில் முதன்மையானது. கச்சதீவை அண்டிய கடலில் காணப்படுகின்ற பவளப்பாறைகள் மீன்களின் இனப்பெருக்கத்தைத் தூண்டுகின்றன. இதனால் மீன்வளம் நிறைந்த பகுதியாக இருக்கிறது இந்தத்தீவு. தவிர இலங்கை - இந்திய மக்களை கலாசார ரீதியாகப் பிணைக்கும் இன்னும் ஒரு விடயமாக இருக்கிறது.

இங்குள்ள அந்தோனியாரின் ஆலயம் 1913 இல் நிறுவப்பட்டது. வருடம் ஒருமுறை நடைபெறுகிற அந்தோனியார் ஆலயப் பெருவிழாவில் இரண்டு நாட்டு மக்களும் கலந்து கொண்டு வழிபாடுகளை நிகழ்த்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரும்புப் பெண்மணி நர்கீஸ்

○ கோகுலராகவன்

2023 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஈரானியப் பெண்மணி நர்கீஸ் முகம்மதி (Narges mohammthi ). இதில் ஆச்சரியப்படவேண்டிய விடயம் யாதெனில் நர்கீஸ் 17 வருடமாக ஈரான் நாட்டின் தெஹ்ரான் எவின் (Evin) சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

ஈரானில் மனித உரிமைக்காகவும், பெண்கள் உரிமைக்காகவும் போராடிக் கொண்டு இருப்பவர் நர்கீஸ். ஈரான் மன்னராட்சி நிலவி வரும் நாடு. இஸ்லாமியக் கோட்பாடுகளை கடுமையாகப் பின்பற்றி வருவதில் ஈரானியர்கள் கடுமையானவர்கள். பெண்களுக்கான சுதந்திரம் வரையறுக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான கருத்துச் சுதந்திரம். ஆடைச் சுதந்திரம் என்பன முற்றாக மறுக்கப்பட்டே இருக்கின்றன.




இந்தச் சுதந்திர மறுப்புக்கு எதிராக நர்கீஸ் போராடத் தொடங்கியபோது ஈரானிய அரசு ஆத்திரப்படத் தொடங்கியது. அடக்குமுறைக்குப் பேர்போன அரசுகள் மக்கள் சுயவிழிப்புணர்வு அடைவதை ஒரு போதும் விரும்புவதில்லை. அது அந்த அரசுகளுக்கு உவப்பானதுமல்ல.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான நர்கீஸ் 2011 முதல் சிறையில் இருக்கிறார்.குழந்தைகளும் கணவரும் பிரான்ஸில் தஞ்சம் அடைந்திருக்கின்றனர். குழந்தைகளைப் பார்ப்பதற்குக் கூட அவர் அனுமதிக்கப்படவில்லை. பௌதிகவியல் பட்டதாரியான நர்கீஸ் அடிப்படையில் பொறியியலாளர். இடையில் சட்டம் பயின்றவர். இதன்மூலம் ஈரானிய அரசமைப்புமுறையை கடுமையாக விமர்சனம் செய்யத்தொடங்கினார்.

இதுவே அவருக்கும் ஈரானிய அரசுக்கும் இடையிலான முரண்பாட்டின் அடிப்படை. ஒவ்வொரு தடவையும் அவரது போராட்டங்களால் நர்கீஸ் திரும்பத் திரும்ப பதின்மூன்று தடவைகள் கைது செய்யப்பட்டார். எல்லாமாக முப்பத்தொரு வருடங்கள் அவரது வாழ்க்கை சிறைப் பறவையாகக் கழிகிறது. இதுவரை 154 கசையடிகள் (lashes) நர்கீஸுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.உலகில் அதிகளவு கசையடிகள் வாங்கிய பெண்ணாக நர்கீஸ் சிறையில் வாடுகிறார்.

இஸ்லாமிய நாடுகளில் இந்தக் கசையடி பிரபல்யமான தண்டனை. ஒன்று வாங்கினாலே உயிர் போகும்.நர்கீஸ் இரும்புப் பெண்மணி தான். மஹ்சா அகமினி என்ற இருபத்தி இரண்டு வயது ஈரானிய இளம்பெண் ஆடைக்கட்டுப்பாடுகளை மீறினாள் என ஈரானிய கலாசாரப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டு, சிறையிலேயே இறந்தும் போனாள். இதை அறிந்த நர்கீஸ் பொலிஸாரின் சித்திரவதையால் அந்தப்பெண் இறந்தாள் என சிறையில் இருந்தே இதற்கு நீதி வேண்டிப் போராடினார். ஈரான் அரசு இன்னும் கடுப்பாயிற்று. நர்கீஸ் யாரையும் சந்திக்க முடியாது என்ற தண்டனையையும் வழங்கியது. நர்கீஸுக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசை அவரது பிள்ளைகள் இருவரும் பெற்றுக் கொண்டனர்.

“அம்மாவைப் பார்க்கமுடியும் என்று நாங்கள் இன்னும் நம்பவில்லை. இன்னும் முப்பது, நாற்பது வருடம் எடுக்கலாம். ஆனால் அவர் எங்கள் இதயத்திலும், அவரது போராட்ட வடிவங்களிலும் எங்களோடே இருக்கிறார்” என்று அந்தப் பிள்ளைகள் கையில் நோபல் பரிசோடு சொன்ன வார்த்தைகள் கேட்பவர்களைக் கண்கலங்க வைத்தன.

> அடக்குமுறைக்குப் பேர் போன அரசுகள் மக்கள் சுயவிழிப்புணர்வு அடைவதை ஒரு போதும் விரும்புவதில்லை. அது அந்த அரசுகளுக்கு உவப்பானதுமல்ல.

மேற்குலகம் நர்கீஸ் முகம்மதியை பயன்படுத்தி ஈரானுக்கு பாடம் புகட்ட நினைக்கிறதா? என்பது தெளிவில்லை. ஆனால் மேற்குலகின் ஆசீர்வாதம் நர்கீஸுக்கு இல்லாமல் இல்லை.

அவர்களுக்கு நர்கீஸ் ஒரு துருப்புச்சீட்டு. ஆனால் அந்தப் பிள்ளைகளுக்கு ..?

என்ன சொல்ல,

நர்கீஸின் வாழ்தல் சிறையே என்றாகிப்போனது.

---



## பாகம் 2

○ இராகவன்

28

அவீட்டுக்குள்ளை மோட்டச்சைக்கிள்ள வந்திறங்கின நவம் மாஸ்ரர், விறாந்தையில பாய விரிச்சுப் படுத்திருந்த அப்பருக்குப் பக்கத்தில வந்திருந்திட்டார். கொஞ்ச நேரத்தால மூத்தண்ணரும் வந்திட்டார். நவம் மாஸ்ரர் அப்பரோட பாயிலயிருக்கிறதைக் கண்டிட்டு 'இந்தாள் ஏன் இஞ்சை வந்தது'? எண்டு தலையில கையவைச்சார். அப்ப நவம் மாஸ்ரர் அப்பருக்கு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார். பிறகு திரும்பிப் பாக்கேக்குள்ள மூத்தண்ணரைக் கண்டாப் போலை உடனை றொப்பிக்கை மாத்தி அப்பரிட்ட, “இவனுக்கு ஒரு கலியாணம் பேசுவமே? நல்ல இடம். சொத்துப் பத்து எக்கச்சக்கம். நல்ல சீதனமும் வரும். நல்ல வடிவான பெட்டையும். என்ன சொல்லுறியள்?” எண்டு கேட்டார். மூத்தண்ணருக்குப் பெரிய சங்கடமாப் போச்சுது.

“சேர்! அங்க வீட்டை உங்களைக் காணேல்ல எண்டு தேடிக் கொண்டிருக்கினம். கெதியாப் போங்கோ ” எண்டு சொல்லி நவம் மாஸ்ரரை நைஸாக் கிளப்பப் பாத்தார். அந்தாள் மசியேல்லை. “டேய்! நாங்கள் பெரியாக்கள் கதைச்சுக் கொண்டிருக்கிறமெல்லே? அதுக்குள்ளை தேவையில்லாமல் வந்து குழப்பினால் உனக்கு எழும்பி அடிப்பன்ரா”. எண்டு காலைச் சாதுவாத் தூக்கினார். அப்பதான் எனக்கு நிலைமை பிழை எண்டு விளங்கிச்சுது. பிறகு ஒரு மாதிரி மூத்தண்ணா ஆளைச் சாதுவா 'பட்டர்' பண்ணி கிளப்பி விட்டுட்டார்.



நான் 2003 முற்பகுதியிலிருந்து 2004 நடுப்பகுதி வரைக்கும் கரவெட்டி சிறிநாரதா வித்தியாலயத்தில பகுதி நேர ஆங்கில ஆசிரியராயிருந்தனான். அப்ப கோட்டக் கல்விப் பணிப்பாளராக அம்பலவாணர் மாஸ்ரர் இருந்தவர்.

நான் விக்கினேஸ்வராக் கல்லூரியில ஏ .எல். படிக்கேக்குள்ள அவர்தான் எங்களுக்கு அதிபராயிருந்தவர். ஓ.எல்லுக்குத் தமிழ், சமூகக்கல்வி படிப்பிக்கிற விண்ணன். தென்மராட்சி வரணிதான் அவரின்ர பிறப்பிடம். கரவெட்டி மத்தியில வந்து கலியாணம் செய்தவர். சம்பந்தர் கடையடியால தச்சந்தோப்புப் பிள்ளையார் கோயிலுக்குப் போற கிழக்கு றோட்டில இறங்கினால் இடப்பக்கம் வாற இரண்டாவது வீடு அவரின்ர வீடுதான். என்ர வாழ்க்கையில அவரைப் போல ஒரு பக்குவப்பட்ட புண்ணியவாளனை நான் இதுவரைக்கும் காணேல்ல.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜீவன் ராம்



ஜீ.ஜீ.பொன்னம்பலம் இணக்க அரசியலைத் தெரிவுசெய்தமை தவறான முடிவு என்பதை இன்றைய தமிழ்த் தலைமுறைக்கு நிரூபிப்பது போன்று, இன்று ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் பேரனான கஜேந்திரகுமார் பொன்னம்பலமே இணக்க அரசியல் எனும் சலுகை அரசியல் தமிழ் மக்களுக்கு ஆபத்தானது என உலகத் தமிழருக்கு உரக்கக் கூறி வருகின்றார்.

4



# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும்

**சேர். பொன்.அருணாச்சலம் வழியில் செல்வநாயகம்**

ஆரம்பத்தில் உரிமை அரசியலுக்காக குரல் கொடுத்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் '50 : 50' சமபலப் கோரிக்கையின் தோல்வியின்பின் சலுகை அரசியல் எனும் இணக்க அரசியலுக்கு தடம்மாறினார். இதன் விளைவாக 1948 ஆம் ஆண்டு அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் எதிர்வினை ஒத்துழைப்பு அடிப்படையில் ஆதரவளிப்பதாகக் கூறி அரசாங்கத்தில் அங்கமாக இணைந்து கொள்கின்றார்.

இதன்மூலம் 1948 ஆம் ஆண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் கைத்தொழில் மற்றும் கடற்றொழில் அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டார். அந்த அமைச்சுப் பதவியைக் கொண்டு தமிழ் மக்களுக்கு பல ஆக்கபூர்வமான திட்டங்களை உருவாக்கினார். அதன்மூலம் தமிழ் மக்கள் பயன் அடைந்தார்கள் என்பது மாற்றுக்கருத்துக்கு அப்பாற்பட்டது. ஆனால் இந்தச் சலுகை அரசியல் என்ற இணக்க அரசியல் தமிழ்மக்களின் இருப்பைப் பாதுகாக்காது என்பதை நன்கு அறிந்திருந்தும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் இவ்வழியைத் தெரிவு செய்தமை தமிழ் மக்களின் தமிழ்த்தேசிய அரசியலுக்கு பின்னடைவாக அமைந்ததுடன் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் நற்பெயருக்கும் மாறாத கரும்புள்ளியாக அமைந்தது.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் இணக்க அரசியலைத் தெரிவுசெய்தமை தவறான முடிவு என்பதை இன்றைய தமிழ்த் தலைமுறைக்கு நிரூபிப்பதுபோன்று, இன்று ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் பேரனான கஜேந்திரகுமார் பொன்னம்பலமே இணக்க அரசியல் எனும் சலுகை அரசியல் தமிழ்மக்களுக்கு ஆபத்தானது என உலகத் தமிழருக்கு உரக்கக் கூறி வருகின்றார்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் உரிமை அரசியலை விடுத்து இணக்க அரசியலைத் தெரிவு செய்தமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் அவரிடம் 50: 50 என்ற சமபல கோரிக்கையைத் தவிர வேறு எந்தத் திட்டமும் தமிழ் மக்களின் உரிமை அரசியலை முன்னகர்த்த இருந்ததாகத் தெரியவில்லை. அதேசமயம் இந்தக்கோரிக்கையை தோல்வியடையச் செய்ய தமிழ்த் தலைமைகளே காரணமாக அமைந்தனர் என்ற விரக்தியில் ஜீ.ஜீ. இந்த முடிவை மேற்கொண்டிருக்கலாம். அல்லது சிங்கள தேசியவாதத்தின் வளர்ச்சியின் தீவிரத்தை உணர்ந்து தமிழ்மக்களின் உரிமைகளை இணக்க அரசியலில் கொஞ்சமாவது பெற்றுக் கொள்ளலாம் என அவர் சிந்தித்திருக்கலாம்.

யதார்த்தத்தில் இணக்க அரசியல் என்பது சலுகைகளை வழங்கும் ஆனால் உரிமைகளை அளிக்காது. உரிமைகள் அற்ற சலுகைகள் நிரந்தரமற்றவை. எனவே சலுகைகளைக் கொண்டு ஓர் இனம் தமது இன இருப்பைப் பாதுகாக்க முடியாது. இணக்க அரசியல் என்பது இறுதியில் உரிமை அரசியலையும் குழிதோண்டிப் புதைத்துவிடும் என்பதே நிதர்சனம். இதை அன்று தொடக்கம் இன்றுவரை எம் தமிழ்த் தலைமைகள் உணராமையே தமிழ்மக்களின் உரிமைக்கான அரசியல் போராட்டம் தொடர்கதையாக நீள்வதற்குக் காரணம்.

**தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியமும்**

கடந்தகால வரலாற்றுச் சம்பவங்கள் மூலம் நாம் ஒரு தெளிவான புரிதலைப் பெற்றுக் கொள்ளலாம். ஜீ.ஜீ.பொன்னம்பலத்தினால் உருவாக்கப்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்பது சேர். பொன். இராமநாதனின் கருத்தியலை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஒற்றையாட்சிக்குள் தீர்வுகாண முற்பட்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம் இறுதியில் தனது கோரிக்கை குழிதோண்டிப் புதைக்கப்படுவதை கைகட்டி வேடிக்கை பார்த்துவிட்டு இணக்க அரசியல் என்ற சலுகை அரசியல் பாதையில் பயணிக்க ஆரம்பித்தார்.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் இந்த இணக்க அரசியல் எதிர்காலத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் இருப்புக்கே பாதகமாக அமையும் எனக் கருதிய செல்வநாயகம் உட்பட சில முக்கியமான தலைவர்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இருந்து வெளியேறி 'அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி' என்ற புதிய கட்சியை உருவாக்கிக் கொண்டனர். செல்வநாயகம் தலைமையிலான குழுவினர் காங்கிரஸில் வெளியேறியமைக்குப் பல வலுவான காரணங்கள் கூறப்பட்டாலும், இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமை பறிபோனதற்கு ஜீ.ஜீ. பொன்னம்பலமே பிரதான காரணமாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே செல்வநாயகம் தரப்பினர் வெளியேறினர் என்ற கருத்தியல் மக்கள் மனதில்திட்டமிட்டுசிலதரப்பினரால் முதன்மைப்படுத்தப்பட்டன.

**தமிழரசின் தோற்றமும் அதற்குரிய பின்னணியும்**

1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி தந்தை செல்வா தலைமையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி நிறுவப்பட்டபோது "எமது இலக்கு தமிழ்பேசும் மக்களுக்கென சுயாட்சி அரசொன்றை நிறுவுவதே" எனத் தெளிவாகக் கூறினார். அந்த இலக்கை அடையும் பணியில் ஒரு பகுதியே இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமையை மீளப்பெற்றுக் கொடுப்பதாக அமைந்ததே தவிர, இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமையை மீளப்பெற்றுக் கொடுப்பதற்காக மட்டுமே தமிழரசுக் கட்சி உருவாக்கப்படவில்லை என்ற புரிதல் எமக்குவேண்டும்.

அன்றைய காலத்தில் தமிழ்த்தேசிய உணர்வை ஒரு கூட்டுக்குள் அடக்க முற்பட்டு அதில் வெற்றியும் பெற்றவர்களால் உருவாக்கப்பட்டதே அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி. அதுவரை காலம் தமிழ்மக்கள் முன்னகர்த்திய உரிமை அரசியல் போராட்டத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்ட கருத்தியலை தமிழரசுக் கட்சியினர் முன்வைத்தனர். ஒற்றை ஆட்சிக்குள் தமிழர் உரிமையை பெற்றுக் கொள்ளலாம் எனக்கூறி தமிழ்த் தலைமைகள் முயன்று தோல்வியடைந்த நிலையில், தாயகக் கோட்பாட்டை முன்நிறுத்தி தமிழ் மக்களுக்கு 'சமஷ்டி' அடிப்படையிலான கூட்டாட்சிக் கோரிக்கையே சிறந்தது எனத் தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் கூறினர்.

குறிப்பாக, தந்தை செல்வா, கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், இரும்பு மனிதர் இ.எம்.வி.நாகநாதன் போன்றோர் அந்தக்காலத்தில் தமிழ்த்தேசிய உணர்வை ஒரு கூட்டுக்குள் அடக்க முற்பட்டனர். தாயகக் கோட்பாட்டை முன்நிறுத்திய 'சமஷ்டி' அடிப்படையிலான கூட்டாட்சிக் கோரிக்கையே எனும் வழியில் தமிழர் அரசியல் போராட்டத்தை முன்னகர்த்திச் செல்ல, தமிழ்த்தேசிய உணர்வை மேலோங்க செய்ய வேண்டிய பெரும் பணி இருப்பதை கட்சி உருவான குறுகிய நாள்களுள் இவர்கள் உணர்ந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் மனதில் உறங்கு நிலையிலிருந்த தமிழ்த்தேசிய உணர்வை மீட்டெடுக்க வடக்கு - கிழக்கு பிரதேசம் எங்கும் பரந்து வாழ்ந்த தமிழ்மக்களை நேரில் சென்று சந்தித்தனர். தமிழ் மக்களுக்கு உரிமை அரசியலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர் என மத அடிப்படையில் பிரிந்து கிடந்த மக்களை ஓர் அணியாகத் திரட்ட தந்தை செல்வாவும் அவரின் சகாக்களும் பட்டிதொட்டி எங்கும் சென்று மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி உணர்வூட்டினர். அதன் விளைவாக மத பேதங்களை கடந்த பேரியக்கமாக தமிழரசுக் கட்சி உருப்பெற்றது.

உதாரணமாக தமிழரசுக் கட்சியில் பெரும்பாலான இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருந்த போதும், யாழ்ப்பாண சமூகத்தில் இந்துக்கள் அதிகம் வாழ்கின்றனர் என அறிந்தும், வாக்கு அரசியலுக்காக மதத்தைப் பயன்படுத்தாமல், கிறிஸ்தவமதத்தைச் சார்ந்த தந்தை செல்வாவே மதத்தைக் கடந்த தமிழ்த்தேசிய உணர்வினால், அவரையே தமிழரசுக் கட்சியின் தலைவராக்கினர். அதேபோல் இலங்கையின் தலைசிறந்த பேச்சாளர்களுள் ஒருவரான எம்.இசட்.மசூர் மௌலானாவை தந்தை செல்வாவே அரசியலில் அறிமுகப்படுத்தினார். இப்படி மத வேற்றுமைகளைக் கடந்து தமிழ்த்தேசிய உணர்வினால் அன்று தமிழரசுக் கட்சி பலப்பட்டது.

அதேபோல் சாதிய ஏற்றத்தாழ்வை ஒழிக்கும் பணியிலும் தமிழரசுக் கட்சி பிற கட்சிகளுக்குள் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. குறிப்பாக, அந்தக்கால தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரான 'கோப்பாய் கோமான்' வன்னியசிங்கம் தமிழ் இனத்தின் மீது அளவற்ற பற்றுக்கொண்டவராகக் காணப்பட்டார்.

விடுதலையை விரும்புகின்ற ஓர் இனம் தனக்குள் ஒரு சிலரின் உரிமைகளை மறுப்பதும், சமநீதி தர மறுப்பதும் ஒழிக்கப்படல் வேண்டும் எனக் குரல் கொடுத்தார். வெறுமனே குரல் கொடுத்ததோடு நின்றுவிடாமல் இவரே 1956ஆம் ஆண்டு தீண்டாமைத் தடைச்சட்ட மசோதாவைக் கொண்டு வந்தவர். அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சாதிய ஏற்றத்தாழ்வு மனநிலை உயர்வாகக் காணப்பட்டது. இவ்வாறு சாதிய ஏற்றத்தாழ்வு உயர்வாகக் காணப்பட்ட சமூகத்தில் அந்தக் கட்டமைப்பை உடைக்க வன்னியசிங்கமே முதலடி எடுத்தார். இவ்வாறு, தமிழ்மக்கள் மனதில் சாதி, மத, பிரதேச பிரிவினைகளைக் கடந்து தமிழ்த்தேசிய உணர்வை ஊட்டி தந்தை செல்வாவும் அவரின் சகாக்களும் தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்திக்கொண்டனர். தமிழ்த்தேசிய உணர்வாளர்களால் தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டு, பின்னர் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களால் தமிழ் மக்கள் மனதில் உறங்கு நிலையிலிருந்த தமிழ்த்தேசிய உணர்வு மேலோங்கச் செய்யப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org